Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 154 | வெள்ளிக்கிழமை 29 ஏப்ரல் 2022 | சித்திரை 16 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ. 40

# பதவி விலகாவிடில் நாடு மீள முடங்கும்!

## தொழிற்சங்கங்கள் ராஜபக்சக்களுக்கு காலக்கெடு

## நேற்றைய போராட்டம் வெற்றி என அறிவிப்பு

## அடம்பிடித்தால் தொடர் போராட்டம் என எச்சரிக்கை

கொழும்பு, ஏப்ரல் 29

ராஜபக்சக்களும் இந்த அரசும் உடன் பதவி விலக வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், எதிர் வரும் 6 ஆம் திகதி வீதிக்கு இறங்கி, கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டு, ராஜபக்சக்களை விரட்டும்வரை போராட்டம் தொடரும். 15



## "உதயன்" மே முதல் ரூ. 50/-

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பத்திரிகைக்கான காகிதாதிகள், அச்சுப் பொருள்கள் மற்றும் எரிபொருள் விலைகள் மலையளவுக்கு சடுதியாக அதிகரித்திருக்கின்றன. கடந்த சில மாதங்களாகவே நீடித்துக் கொண்டிருக்கும் இந்த நெருக்கடிகளைத் தாங்கியவாறு வெளிவந்த "உதயன்", இயலுமை நிலையையும் தாண்டிய இந்த அசாதாரண நிலையைச் சமாளிப்பதற்காக இம்மாதம் முதலாம் திகதி முதல் விலையில் சிறிய அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத் துக்கு "உதயன்" ஆளாகியிருந்தான்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கும் நிலையில், அச்சிடுவதற்காக காகிதாதிகள் மற்றும் ஏனைய பொருள்களின் விலை உயர்வும், எரிபொருள் விலையேற்றங்களும் விலையில் மீண்டும் சிறு அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு "உதயனை" ஆளாக்கியுள்ளன.

01.05.2022 முதல் உதயன் நாளிதழின் விலையை 50 ரூபாவாகவும், உதயன் வார இதழின் (சஞ்சீவி – உதயன்) விலையை 60 ரூபாவாகவும் நிர்ணயிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது.

பல்வேறு நெருக்கடிகள் சூழ்ந்த காலத்தில் "உதயனுக்கு" பக்கபலமாக நின்ற வாசகர்கள், தற்போதைய நெருக்கடி நிலைமையை உணர்ந்து தோளோடு தோள் நிற்பார்கள் என்று "உதயன்" நம்புகின்றான். இந்த விலை மாற்றத்தை பொறுத்தருளி, இதுவரை காலமும் வழங்கிய உங்கள் ஆதரவை தொடர்ந்தும் வழங்குவீர்கள் என்று அன்புரிமையோடு "உதயன்" எதிர்பார்க்கின்றான். எதிர்காலத்தில் நாட்டின் நிலைமை சுமுகமாகும் போது, மீண்டும் பழைய விலைக்கே "உதயன்" உங்கள் கைகளில் தவழுவான் என்பதையும் இந்தருணத்தில் உறுதி செய்கின்றோம். (ஆ–ர்)

## சு.கட்சி திடீர் குத்துக்கரணம் ஜனாதிபதியைச் சந்திக்கும்!

கொழும்பு, ஏப்.29

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விடுத்த அழைப்பையேற்று அவருடன் இன்று பேச்சு நடத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட 11 கட்சிகளின் கூட்டணி 15

## டக்ளஸ் உள்ளிட்ட அமைச்சர்களும் ஜனாதிபதியும் பதவி விலகவேண்டும்!

ஈ.பி.டி.பியின் ஆளுகையில் உள்ள சபையில் தீர்மானம்!

யாழ்ப்பாணம், ஏப்.29

ஈ.பி.டி.பியின் ஆளுகைக்கு உட்பட்ட வேலணைப் பிரதேசசபையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, 15

## ஆர்ப்பாட்டத்தில் ஒருவர் மரணம்

கொழும்பு, ஏப்.29

ஹப்புத்தளையில் நேற்று நடத்தப்பட்ட அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஒருவர் ஆர்ப்பாட்டக்களத்திலேயே உயிரிழந்துள்ளார்.

ஹப்புத்தளை நகரில் நேற்றுக் 11

## புதுக்காட்டுச் சந்தியில் விபத்தில் ஒருவர் சாவு!

கிளிநொச்சி, ஏப்.29

பளை, புதுக்காட்டுச் சந்தியில் நேற்று நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். உடுத்துறை வடக்கைச் சேர்ந்த நாகேந்திரன் ஜெகன் என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார். 11

## உடைமையில் கஞ்சா: ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.29

அச்சுவேலி, பத்தமேனியில் கஞ்சாவை உடைமையில் 15

## பதவியை விடவும் பாசமே முக்கியம்

மஹிந்தவிடம் கோத்தாபய உருக்கம்

கொழும்பு, ஏப்.29

மஹிந்த ராஜபக்சவை பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு நான் ஒருபோதும் கோரவில்லை. பதவி உட்பட ஏனைய எல்லா விடயங்களை 15

## தஞ்சம் கோரிச் சென்றதாக நாடகமாடியோர் சிறையில்

போதைப் பொருள் குற்றவாளிகள் என கண்டுபிடித்தது தமிழக பொலிஸ்

சென்னை, ஏப்.29

யாழ்ப்பாணம், குரு நகரில் இருந்து படகு மூலம் தமிழகத்துக்குச் சென்ற இரு இளைஞர்கள், இலங்கையில் 15



## நாட்டில் மருந்து இல்லை உனக்கு எதுக்கு விருந்து?

அரசுக்கு எதிராக வீதியில் இறங்கிய யாழ். மருத்துவபீட மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஏப்.29

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் அமைச்சரவை உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று 12

## யாழில் இளைஞர்களை அச்சுறுத்தி நூதனமான முறையில் கொள்ளை!

இருவர் சிக்கினர்; பொலிஸார் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், ஏப்.29

யாழ்ப்பாணம் மாநகரில் வெவ்வேறு நான்கு சம்பவங்களில் நூதனமான முறையில் இளைஞர்களை அச் 11

## காணி சுவீகரிக்கும் முயற்சி மக்கள் எதிர்ப்பால் நிறுத்தம்

போராடிய மக்களுக்கு எஸ்.ரி.எவ். அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப்.29

ஊர்காவற்றுறை, கரம்பொன் மேற்கில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை கடற்படை முகாமுக்காக கையகப்படுத்த நேற்று எடுக்கப்பட்ட முயற்சி பொதுமக்களின் எதிர்ப்பால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

காணிகளை அளவீடு செய்வதற்காக நேற்று நில அளவைத் 11

## ரம்புக்கனைச் சம்பவம்; நான்கு பொலிஸார் கைது!

கொழும்பு, ஏப்.29

கேகாலை, ரம்புக்கனையில் மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர் 11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருடர்களைப் பிடிக்கும் பொறுப்பு எனது ஆட்சியில் பொன்சேகாவிடம்

## சஜித் திட்டவட்டமாக அறிவிப்பு



**கொழும்பு, ஏப். 29**

**மக்களின் பணத்தைத் திருடிய குற்றவாளிகள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு தண்டிக்கும் பொறுப்புசார் அதிகாரம், முப்பது ஆண்டுகால போரை முடிவுக்குக் கொண்டு வந்த சரத் பொன்சேகாவிடம் கையளிக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

அடக்குமுறை மிக்க கொடுங்கோல் அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த 'சுதந்திரத்துக்கான போராட்டம்' ஐக்கிய சக்தி பாதயாத்திரையின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கல்கமுவ நகரில் நேற்று ஆரம்பமாகியது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

30 மாதங்களுக்குள் ராஜபக்ச குடும்பம் நமது நாட்டை வங்குரோத்து அடைந்த நாடாக மாற்றி விட்டது. இந்த நாட்டின் தேசிய வளங்கள், தேசிய சொத்துக்கள், தேசிய நிதி என்பவற்றைத் திருட்டுத்தனமாகக் கொள்ளையடித்ததன் காரணமாகவே நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டது.

ஊழலையும் திருட்டையும் கட்டுப்படுத்தும் முகமாக சுதந்திரமான சக்தி வாய்ந்த ஒரு நிறுவனக் கட்டமைப்பை நிறுவுவேன். அதை எந்த வகையிலும் மாற்ற முடியாதவாறு நிரந்தர நிறுவனமாக அதிகாரமளிக்கப் படும். ஐக்கிய மக்கள் சக்தியால் அமையப்பெறும் அரசாங்கத்தின் கீழ் திருடர்களைப் பிடிக்கும் பொறுப்பு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கே வழங்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும் இந்த நிலைப்பாடு மாறாது- என்றார். (ஒ-5)

# நாமலுக்கு எதிரான வழக்கு செப்ரெம்பரில் விசாரணை

கொழும்பு, ஏப். 29

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட ஐவருக்கு எதிரான பணமோசடி சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

கோவர்ஸ் கார்ப்பரேட் சேர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஊடாக 30 மில்லியன் ரூபா பணமோசடியில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆறு பேருக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கில் இரண்டாவது மற்றும் ஆறாவது சந்தேகநபர்கள் முன்னிலையாகாத நிலையில், வழக்கு விசாரணையைத் தொடர உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. (ஒ-இ)

# ஆளும் கட்சிக்குள் பெரும் பிளவுகள்!

## நாமல் பகிரங்கம்



கொழும்பு, ஏப். 29

ஆளும் கட்சிக்குள் பெரும் பிளவுகள் ஏற்பட்டுள்ளன என்று முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

தனது ருவிற்றரில் இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

ஒரு தொகுதி மக்கள் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டங்களை நடத்துவதில் தீவிரம்காட்டி வருகின்றனர். எதிர்க்கட்சியினர் போராட்டங்கள், பேரணிகளை நடத்துவதில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்கின்றனர்.

ஆளும் கூட்டணிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதுடன், பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பதில் தீவிரம் காட்டப்பட்டு வருகிறது.

நாடு பாரதூரமான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள இந்தத் தருணத்தில் நாம் அனைவரும் பிரச்சினைக்குத் தீர்வுகாண மெய்யாகவே முனைப்புக் காட்டுகின்றோமா? அல்லது வேறு விடயங்களில் தீவிரமாக இருக்கின்றோமா? - என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

# அமெரிக்க டொலர் 500 ரூபாவை எட்டும்

கொழும்பு,ஏப்.29

இந்த ஆண்டின் இறுதிக்குள் அமெரிக்க டொலரின் பெறுமதி 500 ரூபா வரை அதிகரிக்கக்கூடும் என்று முன்னாள் கணக்காய்வாளர் காமினி விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைச் சீர்செய்வது தொடர்பான கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நெருக்கடியால் பாதிக்கப்பட்ட தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப ஒரு புதிய வேலைத்திட்டம் அவசியம். நாடு வங்குரோத்து நிலையில் இருப்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ளவேண்டும். நாட்டின் தற்போதைய கடன் நிலைமை, அரசாங்கம் கடமை தவறியிருப்பதை எடுத்துக் காட்டுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதற்கு தீர்மானம்!

## ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 29

ஐக்கிய மக்கள் சக்தியால் அரசாங்கத்துக்கு எதிராகக் கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவை வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளதாகக் கட்சியின் பிரதித் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தியால் அரசாங்கத்துக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவை வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

எனவே நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதற்கு முதலில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அனைத்துக் கட்சிகளும் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் - என்றார். (ம)

# எச்.ஐ.வி. தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்தது

கொழும்பு, ஏப். 29

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்படுவதாகத் தெரிவித்துள்ள சுகாதார மேம்பாட்டு அலுவலகம் புதிதாக தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை 3 ஆயிரத்து 700 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், கடந்த வருடம் 410 பேர் தொற்றுக்குள்ளாகி உள்ளனர்.

2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியோரின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது. (ஒ-இ)

# நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் முடிந்தால் கையொப்பமிடுங்கள்

## வாசுதேவ நாணயக்காரவின் கருத்துகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி சரமாரித் தாக்குதல்



கொழும்பு, ஏப். 29

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஐக்கிய மக்கள் சக்தி கொண்டு வருவதில் தற்போது இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது. பஸிலுடன் சஜித் தரப்பு ஒப்பந்தம் செய்துள்ளதா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்று முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருந்த நிலையில், முதலில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையொப்பமிட்டுவிட்டுக் கதையுங்கள் என்று வாசுதேவவுக்குப் பதிலடி கொடுத்துள்ளது ஐக்கிய மக்கள் சக்தி.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளர் மரிக்கார் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாசுதேவ நாணயக்கார அரசாங்கத்துடன் ஒன்றித்திருந்த காலத்திலேயே நாங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு பெறும் முயற்சியில் இறங்கிவிட்டோம். அப்போதும், அரசாங்கத்தைவிட்டு வெளியில்வந்த பின்னர் இப்போதும் வாசுதேவ நாணயக்கார அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு இன்னும் ஆதரவு வழங்கிக் கைச்சாத்திடவில்லை.

கப்புட்டா (பஸில்) ஊழல்வாதி எனத் தெரிந்துகொண்டும் ஊழல்வாதியான, இரட்டைக் குடியுரிமை யைக் கொண்ட கப்புட்டாவை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருவதற்காக 20ஆவது திருத்தத்துக்குக் கையுயர்த்தியவரே இந்த வாசுதேவ நாணயக்கார.

1970ஆம் ஆண்டு ராஜபக்சவுடன் ஒன்றாக நாடாளுமன்றத்துக்கு அவர் சென்றார். அதனாலேயே விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பிலவை நீக்கிய போதிலும் ராஜபக்சக்கள் அவரை மாத்திரம் பதவி நீக்கவில்லை. எனவே, கண்ணாடி முன்சென்று ராஜபக்சக்களுடன் இருக்கும் தொடர்பையும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கையொப்பம் இடாதது குறித்தும் வாசுதேவ நாணயக்கார சிந்தித்துப்பார்க்க வேண்டும். வாசுதேவ நாணயக்கார சுத்தமானவர் என்றால், ராஜபக்சக்களுடன் டீல் இல்லை என்றால், கப்புட்டாவுடன் டீல் இல்லை என்றால் கையொப்பம் இடுவதற்காக, அவர் கூறும் எந்தவொரு இடத்துக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து தருகின்றோம் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசியப் பொருளுக்கு நன்கொடைகள் தரவேண்டும்!

## இலங்கை மத்திய வங்கி கோரிக்கை

கொழும்பு, ஏப். 29

அந்நியச் செலாவணி கையிருப்புக் குறைவதால் பொதுமக்கள் எதிர்நோக்கும் சிரமங்களைப் போக்க வெளிநாடுகளில் உள்ள அனைத்து இலங்கையர் மற்றும் நன்கொடையாளர்களின் உதவியை எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த அந்நியச் செலாவணி நன்கொடை மருந்துகள், எரிபொருள் மற்றும் உணவு போன்ற அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்றும் மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (ம)

# 13 பவுண் நகைகள் வீடுடைத்துத் திருட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.29

வீடுடைத்து பன்னிரண்டே முக்கால் பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டு மானிப்பாய் நவாலி கிழக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. வீட்டின் உரிமையாளர் மனைவி, பிள்ளைகளுடன் மானிப்பாய் நகருக்குச் சென்றபோது திருட்டு இடம்பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளர்கள் நகரிலிருந்து திரும்பியபோது, வீட்டின் கதவை உடைத்து, அங்கிருந்த தாலிக்கொடி, சங்கிலி உட்பட பன்னிரண்டே முக்கால் பவுண் நகைகள் திருடப்பட்டமை தெரியவந்தது. வீட்டின் உரிமையாளரால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. தடயவியல் பொலிஸார் வீட்டில் தடயங்களைத் திரட்டியுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (க-125)

# வர்த்தக அமைச்சின் செயலாளர் பதவி நீக்கம்

கொழும்பு, ஏப்.29

வர்த்தக அமைச்சின் செயலாளர் ஜே.எம்.பி.ஜயவர்தன உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில், ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜே.எம்.பி.ஜயவர்தனவை செயலாளர் பதவியிலிருந்து நீக்குமாறு, முன்னாள் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தொடர்ந்தும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் வர்த்தக அமைச்சின் புதிய செயலாளராக நீல் பண்டார ஹபுஹின்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜே.எம்.பி.ஜயவர்தன வர்த்தக அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றியபோது, பல நிறுவனங்களின் தலைவராகவும், பல நிறுவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-இ)

# அனைத்துக்கட்சிக் கூட்டம் சு.க. விதித்த நிபந்தனை!

கொழும்பு, ஏப். 29

ஜனாதிபதியுடனான அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு சுதந்திரக் கட்சி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு நிபந்தனைகளை விதித்துள்ளது.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் இன்று அனைத்துக்கட்சிக் கூட்டம் இடம்பெறவுள்ளது. இதில் தமது கட்சி கலந்துகொள்ள வேண்டுமாயின், சாந்த பண்டார மற்றும் சுரேன் ராகவன் ஆகியோரை அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கவேண்டும் என்ற நிபந்தனையை சுதந்திரக் கட்சி விதித்துள்ளது. (ம)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் சிங்களவர்களும் இணையவேண்டும்

## செல்வம் எம்.பியின் விருப்பம் இது

முல்லைத்தீவு, ஏப். 29

நாட்டில் இன ஐக்கியம் உருவாகியுள்ளதாக இருக்குமேயானால் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் சிங்கள, முஸ்லிம் மக்களும் கலந்துகொள்ள வேண்டுமென வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் மக்கள் எதிர்கொண்டுள்ள சிக்கல் நிலைமைக்கு காரணமான ஆட்சியாளர்களை வீட்டுக்குச் செல்லுமாறு வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் வலுத்துள்ளன. இந்தப் போராட்டங்கள் ஜனநாயக ரீதியான போராட்டம் என்பதால் எவரையும் கைதுசெய்யவில்லை. அந்தவகையில் நாமும் இதனை வரவேற்பதோடு போராட்டத்துக்கு ஆதரவையும் தெரிவிக்கின்றோம்.

இந்தப் போராட்டங்களின்போது தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை பல சிங்கள சகோதரர்கள் ஏற்று வருகின்றனர். தமிழ்மக்களின் மனங்களில் புரையோடிப்போயுள்ள யுத்த வலிகளையும், யுத்தத்தால் மரணித்த தமிழர்களையும் நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களும் கலந்துகொண்டு இறந்த தமிழ்மக்களுக்காக அஞ்சலி செலுத்தவேண்டும். அதுவே உண்மையான மாற்றமாக அமையும்- என்றார். (ம-110)




**சோ**ழியன் குடுமி மட்டுமில்ல அமெரிக்கன் குடுமியும் சும்மா ஆடாது கண்டியளோ. எது செய்தாலும் அதுக்குப் பின்னால ஆயிரம் காரணம் இருக்கும். அப்பிடிப்பட்ட அமெரிக்காவின்ர இலங்கைத் தூதுவர், நாடே அல்லோலகல்லோலப்படேக்குள்ள, யாழ்ப்பாணத்துக்கு வந்து, ஒரு கிழமையா நிக்கிறா எண்டால் அதுக்கு காரணமில்லாமல் இருக்குமோ?

என்னதான் அரசாங்கத்துக்கு எதிரா சனங்கள் தன்னெழுச்சியாப் போராடினாலும், இதுக்கு சில நாடுகள் ஆதரவும் குடுக்குதுகள். அதில அமெரிக்கா முக்கியமான நாடு எண்டது எல்லாருக்கும் பப்ளிக்கா தெரியும். போராட்டத்துக்கு பின்னால அமெரிக்கா நிக்குதோ இல்லையோ, ஆனால் இந்தப் போராட்டம் நடக்கிறதை அமெரிக்கா சந்தோசமாப் பார்த்துக் கொண்டிருக்கு. அதோட ஆட்சியில இருக்கிறவையை வெளியேற்றுற வரைக்கும் இந்தப் போராட்டங்கள் இப்பிடி இதேமாதிரி கொதிச்சுக் கொண்டிருக்க வேணும் எண்டது அமெரிக்காவின்ர விருப்பம். அந்த விருப்பத்துக்கு ஏத்தமாதிரி இலங்கையின்ர எல்லா இடங்களிலையும் சனங்கள் ஆயிரக் கணக்கில அலை மாதிரி வந்து போராடத்தொடங்கியிருக்கினம்.

ஆனால் போராடுறதுக்கு பேர்போன வடக்கில, இந்தப் போராட்டம் பற்றி பெரிசா ஆரும் கணக்கில எடுக்கேலை. -சிங்களவருக்கு எதிரா சிங்களவரே போராடுகினம். அதுவும் பொருளாதாரப் போராட்டம். அவைக்கு ஆட்சி மாறி, சாமான் விலை குறைஞ்சால் எல்லாம் ஓகே. ஆனால் நாங்கள் அப்பிடியோ? எங்கட பிரச்சினையை தீர்க்கச் சொல்லி, எங்களுக்கு நீதி தரச் சொல்லி அவை போராடேலையே. இதுக்குள்ள எதுக்கு நாங்கள் வீணாத் தலையைக் குடுக்கோனும்? ஒரு மூலையில இருந்து வேடிக்கை பாக்கோனும்? - எண்டதுதான் கனபேரின்ர முடிவு. அதால சிங்களப் பகுதியளில நடக்கிற மாதிரி இஞ்ச பெருமெடுப்பில போராடுறதுக்கு சனம் தயாரில்லை. இப்பிடி ஒரு முடிவை ஒருத்தருமே எதிர்பாக்கேலை.

- ஏன் வடக்குத் தமிழர் போராட முன்வரேலை?
- எண்டது கனபேருக்கும் புரியாத புதிராத்தான் இருந்திச்சு. அந்தப் புதிரை அவிக்கத்தான் அமெரிக்கத் தூதர் யாழ்ப்பாணத்தில வந்து கிழமைக் கணக்கில நிக்கிறா. எல்லா மட்டத்தில உள்ளவையோடையும் கதைச்சு, இஞ்ச உள்ள ஆக்களின்ர எண்ணத்தை நாடி பிடிச்சுப் பாக்கிறா. வழக்கமா யாழ்ப்பாணத்துக்கு அமெரிக்கத் தூதர்மார் வந்தால் மிஞ்சிப் போனால் ரண்டுநாள் தான் நிப்பினம். குறிப்பிட்ட சில ஆக்களை மட்டும் தான் சந்திப்பினம். ஆனால் ஜூலி சங், கிழமைக் கணக்கில நிக்கிறா. புதுப்புது ஆக்களையெல்லாம் சந்திக்கிறா.

அங்க (கொழும்பில) இருக்கேக்க ஏன் யாழ்ப்பாணத்து மக்கள் போராடாமல் இருக்கினம் எண்டு பிடிபடேலை. ஆனால் இஞ்ச வந்து ஆக்களோட கதைச்ச பிறகுதான் அவை ஏன் போராட முன்வரேலை எண்டதை உணரமுடிஞ்சுது. உங்கட உணர்வுகள் எங்களுக்கு விளங்குது. எண்டு அவா சொல்லியிருக்கிறா.

சிலவேளைகளில இனிமேல் ஆர்ப்பாட்டம் செய்யிற எல்லாரும், தமிழரின்ர பிரச்சினைகளைப் பற்றியும் கடுமையாக் குரல் எழுப்பவும் சான்ஸ் இருக்கு. ஏனென்டால் அமெரிக்கா நினைச்சால் எதுவும் செய்யும் எண்டது எல்லாருக்கும் தெரியும் தானே.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாத்தறை நகரில் நேற்று இடம்பெற்ற பிரமாண்ட பேரணி...



காலிமுகத்திடலை நோக்கி நகரும் பேரணி....

## தொழிற்சங்கப் போராட்டத்துக்கு பெருந்தோட்ட மக்களும் ஆதரவு



தோட்டத் தொழிலாளர்கள் பணிக்குச் செல்லாது வீடுகளுக்கு முன்னால் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

பெருந்தோட்டப் பகுதிகளை அண்டியுள்ள நகரங்களில் 90 வீதமான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. (க-இ)




அரசாங்கத்துக்கு எதிராக திருகோணமலை மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக, இலங்கை வங்கி உழியர்கள் சங்கம் மற்றும் தபால், மின்சாரம், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (க-40)

## சுதந்திர வர்த்தக ஊழியர்கள் கட்டுநாயக்கவில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஏப்.29

அரசாங்கத்துக்கு எதிராக தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு ஆதரவாக, கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கட்டுநாயக்க எவெரிவத்தைச் சந்தியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தால், அந்தப் பகுதி வீதிகளின் போக்குவரத்துத் தடைப்பட்டது.

அதேவேளை, அரசாங்க மற்றும் தனியார் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள பணிப்புறக்கணிப்பு காரணமாக, நாட்டின் அனைத்து பகுதிகளிலும் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. (க-இ)



கொக்கலவில் உள்ள சுதந்திர வர்த்தக வலயத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் அரசுக்கு எதிராக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



தம்பலகாமம் சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில், பிரதான வீதியை மறித்து நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "கோத்தா கோ ஹோம்", " பஸில் கபுட்டா கா கா" உள்ளிட்ட கோஷங்களை எழுப்பினர். (க-இ)

## மட்டுப்படுத்தப்பட்ட ரயில்கள் சேவையில்

கொழும்பு,ஏப்.29

அரசாங்கத்துக்கு எதிராக நாடுதழுவிய ரீதியில் தொழிற்சங்கங்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், மட்டுப்படுத்தப்பட்ட ரயில் சேவைகள் இடம்பெற்றன.

அரச பேருந்துச் சேவைகளும் நேற்று வழமை போன்று இடம்பெற்றன.

அதேவேளை, தனியார் பேருந்து உரிமையாளர்கள் அடுத்த வாரம் சேவைப் புறக்கணிப்பை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளமையால், போராட்டத்துக்கு ஆதரவு வழங்கவில்லை. (க-இ)

## விமான நிலையப் பணிகள் நேற்று முடக்கப்படவில்லை

கொழும்பு,ஏப்.29

பல்வேறு தொழிற்சங்கங்களால் நாடு தழுவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டபோதும், கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் கொழும்பு துறைமுகத்தின் செயற்பாடுகள் வழமை போன்று நேற்று இடம்பெற்றன.

எனினும் குறைந்தளவான பணியாளர்களே பணிக்கு வருகை தந்தனர் என்று துறைமுக தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்துக்கு நேற்று 5 சரக்குக் கப்பல்கள் வந்து சேர்ந்தன. அதிலுள்ள கொள்கலன்களை தரையிறக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் வழமைபோன்று நேற்று சேவையில் ஈடுபட்டன. (க-இ)

## வெறிச்சோடியது புறக்கோட்டை




கொழும்பு,ஏப்.29

அரசாங்கத்துக்கு எதிராக நேற்று நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு ஆதரவாக புறக்கோட்டையில் உள்ள சில மொத்த விற்பனை நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. 4ஆம் மற்றும் 5ஆம் குறுக்குத் தெருக்களிலுள்ள வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. இதனால் புறக்கோட்டைப் பகுதியில் மக்கள் நடமாட்டம் வழமைக்கு மாறாகக் குறைவடைந்திருந்தது. சில பகுதிகளில் மக்கள் நடமாட்டத்தைக் காணமுடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்துக்கு வடக்கிலும் ஆதரவு

அரசாங்கத்துக்கு எதிராக பல்வேறு தொழிற்சங்கங்களால், நேற்று நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு, வடக்கு மாகாணத்திலும் ஆதரவு தெரிவிக்கப்பட்டது. வர்த்தக நிலையங்கள், சந்தைகள் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகளும் செயற்படவில்லை. வீதிகளிலும் மக்கள் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது. (சு-113,213,9,17,18)




நாடு தழுவிய ரீதியில் பல தொழிற்சங்கங்களும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணம் முற்ற வெளிப்பகுதியில் இனந்தெரியாத நபர்களால் ரயர் கொளுத்தி எரிக்கப்பட்டுள்ளது. (சு-125)



கிளிநொச்சியில்....

## தொழிற்சங்கப் போராட்டத்தால் இயல்பை இழந்தது யாழ்ப்பாணம்






யாழ்ப்பாணம்,ஏப்.29


அரசாங்கத்துக்கு எதிராகப் பல்வேறு தொழிற்சங்கங்களால் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தால், யாழ்ப்பாண மாவட்டத்தின் இயல்பு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

போராட்டத்துக்கு ஆதரவாக, யாழ்ப்பாணம் நகரப்பகுதி உட்பட ஏனைய பிரதேசங்களிலும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. தனியார் மற்றும் அரச போக்குவரத்துச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்றன.

பாடசாலைகள் மற்றும் வங்கிகளும் இயங்கவில்லை.

ரயில் சேவைகள், தபால் சேவைகள் முற்றாகச் செயலிழந்தமையால், மக்களின் நாளாந்த நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

வீதிகளில் பொதுமக்களின் நடமாட்டம் மிகக்குறைவாகவே காணப்பட்டது. (சு-17,26)




மன்னாரில்....



தென்மராட்சியில்...



வவுனியாவில்...

அரசாங்கத்துக்கு எதிராக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், பல்கலைக் கழகம் முன்பாக நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (சு-27)




## சீனமொழி பதாகையுடன் வவுனியாவில் போராட்டம்

வவுனியா,ஏப்.29

ஒன்றிணைந்த கூட்டுத் தொழிற்சங்கங்களால் வவுனியாவில் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில், சீன மொழியால் எழுதப்பட்ட பதாகையையும் போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர். அத்துடன் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிப் பதாகைகளையும் தாங்கியிருந்தனர். (சு-110)




இலங்கையிலுள்ள அனைத்து ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகளால் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு ஆதரவாக, இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையம் முன்பாக கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது. (சு-26)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஸ்தானின் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம்






வவுனியா,ஏப்.29
அரசாங்கத்துக்கு எதிராக வவுனியாவில் நேற்று பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. வவுனியா காமினி மகாவித்தியாலத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய தொழிற்சங்க உறுப்பினர்கள், அங்கிருந்து வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு அலுவலகத்துக்கு முன்பாகச் சென்று அலுவலகத்தை முற்றுகையிட்டனர். அங்கிருந்து கொறவப்பொத்தான வீதி வழியாகப் பேரணியாகச் சென்று பஸார் வீதி வழியாக கண்டி வீதியில் அமைந்துள்ள இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் அலுவலகத்தை முற்றுகையிட்டு கோஷம் எழுப்பினர். அலுவலகங்களுக்கு முன்பாக அரசுக்கு ஆதரவு வழங்காதே என்ற பதாகைகளையும் தொங்கவிட்டுச் சென்றனர். அதேவேளை சுகாதாரத் துறை சார்ந்த தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தினரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வவுனியா மருத்துவமனையில் இருந்து பேரணியாகச் சென்று மருத்துவமனைச் சுற்று வட்டத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (க-110)




## ஐ.நா.வின் தலையீட்டை கோரும் சிங்களவர்

ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது, இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக ஐ.நா.வின் தலையீட்டைக் கோரும் பதாகைகளைத் தாங்கிப்பிடித்திருந்தனர் புலம்பெயர் சிங்களவர்.




## திலீபனின் அலுவலகமும் முற்றுகை

வவுனியா,ஏப்.29
அரசுக்கு ஆதரவு வழங்காதே எனத் தெரிவித்து, மன்னார் வீதியில் அமைந்துள்ள மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனின் அலுவலகத்துக்கு முன்னால் ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
சுமார் 30 நிமிடங்கள் அலுவலகத்தை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் அலுவலகப் பகுதியில் கறுப்புக்கொடியைப் பறக்கவிட்டதுடன், அலுவலக மதிலில் "அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்காதே" என தமிழிலும், "அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கினால் ஊருக்கு வராதே" என சிங்களத்திலும் பெரிதாக எழுதிவிட்டு அங்கிருந்து சென்றனர். (க-18)

## போராட்டக்காரர்களைக் கண்டு ஓடி ஒளிந்தனர் பொலிஸார்!

வவுனியா, ஏப். 29
வவுனியாவில் அரசாங்கத்துக்கு எதிராக நேற்றுப் பெரும் எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றபோது, பாதுகாப்புக் கடமைகளுக்காக நியமிக்கப்பட்ட கலகமடக்கும் பொலிஸார் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் அலுவலகத்துக்குள் சென்று ஒளிந்துகொண்டனர்.
குறித்த பேரணி வவுனியா - கண்டி வீதியால் சென்றபோது, இராஜாங்க அமைச்சர் மஸ்தானின் அலுவலகத்தின் பாதுகாப்புக்காக கலகமடக்கும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். ஆனால் அவர்கள் அலுவலகத்துக்குள் சென்று ஒளிந்துகொண்டனர்.
பேரணி அந்த அலுவலகத்தைக் கடந்து நகர்ந்த பின்னரே அவர்கள் வெளியில் வந்தனர். (ம-110)





## யாழ்.போதனாவில் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.29
நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கோரி ஏனைய தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்.தாதிய உத்தியோகத்தர்கள் சங்கத்தினரும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
மருத்துவமனையில் நிலவும் மருந்துகளுக்கான தட்டுப்பாட்டால், நோயாளர்களைப் பராமரிப்பதில் ஏற்பட்டுள்ள சிரமத்துக்குத் தீர்வுகோரி தாதியர்கள் கறுப்புப்பட்டி அணிந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (க-125)



## யாழ். பல்கலைக்கழகத்துக்கு அமெரிக்கத் தூதுவர் பயணம்

யாழ்ப்பாணம், ஏப். 29
யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலிசங் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குப் பயணம் மேற்கொண்டார்.
இதன்போது யூ.எஸ்.எயிட் அனுசரணையுடன், பல்கலை உயர்பட்டப்படிப்புகள் பீடத்தால் நடத்தப்படும் "சமாதானமும், முரண்பாடுகளுக்கான தீர்வுகளும்" என்ற முதுமாணிக் கற்கைநெறிக்கான அனுசரணையாளர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.
அமெரிக்கத் தூதுவர் முன்னிலையில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தரும், யூ.எஸ்.எயிட் நிறுவன அதிகாரிகளும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். (ஒ-14)

## பொதுப்போக்குவரத்துச் சேவைகளுக்கு இடையூறு விளைவிப்போர் உடன் கைது

### அமைச்சர் பணிப்பு



கொழும்பு,ஏப்.29
பொதுப்போக்குவரத்துச் சேவைகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்துபவர்களை உடனடியாகக் கைதுசெய்யுமாறு போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.
ஆர்ப்பாட்டங்கள் காரணமாகப் பொதுப்போக்குவரத்துச் சேவைகளுக்கு இடையூறு விளைவிப்பவர்கள் மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துபவர்களைக் கைதுசெய்யுமாறு ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளது.
அதற்கமைவாக வீதிகளை இடைமறித்து, பொதுப்போக்குவரத்துச் சேவைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (க-இ)

## கட்டட நிர்மாணப்பணிகள் 3 மாதங்களுக்கு நிறுத்தம்

கொழும்பு, ஏப்.29
எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு அனைத்துக் கட்டட நிர்மாணப்பணிகளையும் இடைநிறுத்துமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை தேசிய கட்டுமானச் சங் கத்தின் தலைவர் சுசந்த லியனாராச்சி தெரிவித்துள்ளார்.
கட்டட நிர்மாணத்துக்கான மூலப்பொருள்கள் விற்பனை செய்யப்படாத நிலை ஏற்படும் போது, இறக்குமதியாளர்கள் விலையைக் குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நாளொரு நல்வார்த்தை

நாம் யதார்த்தத்தை விட கற்பனையினாலேயே அடிக்கடி துன்பப்படுகிறோம்.

- செனிக்கா

## மக்கள் கோருவது இதையல்ல!

ஜனாதிபதி கோத்தாபயவும் , பிரதமர் மஹிந்த தலைமையிலான அமைச்சரவையும் பதவி விலகவேண்டும் என்று நாடுமுழுவதும் இடம்பெற்றுவந்த தன்னெழுச்சிப் போராட்டங்கள் தற்போது அடுத்த கட்டத்துக்குச் சென்றிருக்கின்றன. வெறுமனே 'ஜனநாயக ரீதியிலான அழுத்தம்' என்ற மிதவாதப்போக்கில் இடம்பெறும் போராட்டங்களும் அந்தப் போராட்டங்களால் வெளிப்படுத்தப்படும் அழுத்தமும் ராஜபக்சக்களுக்குப் புரியாத மொழியாக ஆகிவிட்டது. இதனால் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இணைந்து நேற்றையதினம் அரசாங்கத்துக்கு ஒரு செயற்பாட்டு முடக்கத்தை ஏற்படுத்தியதுடன் சர்வதேசக் கவனக் குவிவைப் பெறும் வகையிலான ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளையும் நடத்திமுடித்திருக்கின்றன.

மக்களின் கோபாவேசம் வெறுமனே ஜனாதிபதிக்கோ அல்லது பிரதமருக்கோ எதிரானது அல்ல. இந்தப் போராட்டங்கள் ஒட்டுமொத்த அரசாங்கத்துக்கும் எதிரானவை – ஊழலுக்கு எதிரானவை – வினைத்திறனற்றதும் சாபக்கேடானதுமான ஆட்சிக்கு எதிரானவை. ஒருவர் மீதமில்லாமல் ஒட்டுமொத்த ராஜபக்சக்களும் வீட்டுக்குச் செல்லவேண்டும். அதிகாரக் கதிரைகளை அவர்கள் அலங்கரிக்கக்கூடாது என்றுதான் மக்களும் தொழிற்சங்கத்தினரும் இந்தப் போராட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். ஆனால், பிரதமரோ, ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் 19ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தத் தயார் என்றும், ஜனாதிபதியோ, சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்குத் தயார் என்றும் மாறிமாறி 'தற்காப்பு' அரசியல் செய்கின்றார்களே தவிர மக்கள் போராட்டங்களுக்கு உரிய கனதியை – மதிப்பைக் கொடுக்கும் நிலையில் அவர்கள் இல்லை. சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்காக இன்றையதினம் சர்வகட்சிக் கூட்டத்துக்கு ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட அழைப்பும் அத்தகையதே.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் 19ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்கும் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்பதற்கும் அப்பால் ராஜபக்சக்களை உடனடியாகப் பதவிகளில் இருந்து விலகி வீட்டுக்குச் செல்லவேண்டும் என்றுதான் மக்கள் கோருகின்றனர். அவர்களை வீட்டுக்கு அனுப்பியதன் பின்னரான நகர்வுகள்தான் இந்த இரண்டுமே தவிர, 19ஆவது திருத்தத்தையோ அல்லது சர்வகட்சி அரசாங்கத்தையோ ராஜபக்சக்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று எந்தத் தன்னெழுச்சிப் போராட்டங்களும் வலியுறுத்தவில்லை.

ராஜபக்சக்கள் பதவியில் இருக்கும் ஒவ்வொரு நாளும் அரசாங்கத்துக்குப் பின்னடைவுதான். அந்நியச் செலாவணி இன்மை, டொலரை ஈட்ட இயலாமை உள்ளிட்ட 'இயற்கையான' பின்னடைவுகளுக்கு மேலதிகமான, இனிவரும் நாள்களில் ராஜபக்சக்களுக்கு 'செயற்கையான' பின்னடைவுகள் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலம் ஏற்படுத்தப்பட வாய்ப்புக்கள் அதிகம். சர்வதேசப் பொருளாதாரச் சுழற்சிக்கு ஈடுகொடுக்க முடியாமல் திசைமாறிப் பயணித்துக் கொண்டிருக்கும் அரசாங்கம் இனிவரும் நாள்களில் உள்நாட்டிலும் பொருளாதார சுழற்சியற்ற நிலையை வலுவாக எதிர்கொள்ளத்தான் போகின்றது. அதைத்தான் நேற்றைய தொழிற்சங்கப் போராட்டங்களும் பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும் கட்டியம் செய்துள்ளன.

நிலைமையை மேலும் மோசமாக்காமல் இப்போதாவது ராஜபக்சக்கள் விலகி வினைத்திறனான நிர்வாகமொன்றுக்கு வழிவிடவேண்டும். அதைவிடுத்து 19ஆவது திருத்தம், சர்வகட்சி அரசாங்கம் என்ற சமாளிப்புக்களில் காலம் கடத்திக் கொண்டிருந்தால் இருக்கும் கொஞ்சநஞ்ச மரியாதையையும் அவர்கள் இழப்பதோடு நாடும் நரகமாக மாறிவிடும்.




# கோத்தாபய பதவியில் தொடரவேண்டும்

## சுயாதீன அணியினர் கோரிக்கை

கொழும்பு, ஏப். 29

**அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லை என்பதே மக்களின் நிலைப்பாடாகும். அதே நிலைப்பாட்டிலேயே நாமும் உள்ளோம். ஆனால், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதிகாரத்தில் இருக்கவேண்டும். ஜனாதிபதி தலைமையில் சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்குவதே சிறந்த தீர்வாகும்.**

இவ்வாறு அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 11 பங்காளிக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

அரசாங்கத்தில் உயரிய பதவிகளில் இருந்துகொண்டு தீர்மானம் எடுக்கும் ஒரு சில நபர்களினாலேயே நாடு இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

எனவே பிரதமர் உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசாங்கமும் பதவி விலகவேண்டும். ஜனாதிபதி தலைமையில் சர்வகட்சி அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும் என்று பங்காளிக் கட்சிகள் மேலும் வலியுறுத்தியுள்ளன. (ம)

# ஜனாதிபதி, பிரதமர் இருவரும் கூட்டாக பதவிவிலக வேண்டும்

## சந்திரிகா ஆவேசம்

கொழும்பு, ஏப். 29

'ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவைக் காப்பாற்றுவதற்காகவே பிரதமர் மஹிந்த ராஜபக்சவைப் பதவி விலகுமாறு பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் கோரி வருகின்றனர். ஒருவரை மட்டும் பதவிவிலகக் கோரும் இந்தச் சுயலாப அரசியல் கோரிக்கை ஏற்கத்தக்கது அல்ல. வீதிகளில் இறங்கிப் போராடும் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நாட்டின் ஜனநாயகத்தைச் சீரழித்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் ஒரே தடவையில் உடனடியாகப் பதவி விலகவேண்டும் இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வலியுறுத்தினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

காலம் தாழ்த்தாது கௌரவமாக இருவரும் பதவிவிலகி புதிய ஆட்சிக்கு வழிவிட வேண்டும். பிரதமர் மஹிந்தவை மட்டும் பதவி விலக்கி ஜனாதிபதி கோத்தாபய தலைமையில் இடைக்கால அரசு அமைந்தால் அதை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மக்கள் போராட்டங்கள்தான் மேலும் வீரியமடையும்.

எனவே, ஜனநாயகத்தைச் சீரழித்த ஜனாதிபதி கோத்தாபயவும், பிரதமர் மஹிந்தவும் உடனடியாகப் பதவி விலகவேண்டும். இல்லையேல் பெரும் விளைவுகளை சந்திக்க வேண்டிவரும். பிரேரணைகள் வாக்கெடுப்புக்கு வந்தால் ஆளும் , எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரின் உண்மை முகங்களை அறிந்துகொள்ள முடியும் - என்றார். (ம-22)

**நாளை** 30.04.2022 சனிக்கிழமை சித்திரை 17

சுபநேரம் : 02.58 - 04.28
ராகுகாலம்: 08.58 - 10.28

அமாவாசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக விலையேற்றத்தின் எதிரொலி பெற்றோல், டீசல் கொள்வனவு வீழ்ச்சி



**கொழும்பு, ஏப்.29**

**விலை அதிகரிப்புக் காரணமாக, பெற்றோல் மற்றும் டீசலின் கொள்வனவு, சுமார் 30 வீதத்தால் குறைந்துள்ளது என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.**

இதனால் பெற்றோல் மற்றும் டீசல் தட்டுப்பாடு பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. வரிசைகளும் முடிவுக்கு வந்துள்ளன. அதேவேளை சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக, மண்ணெண்ணெய்க்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தற்போது ஜெட் எரிபொருளே மண்ணெண்ணெயாக விற்பனை செய்யப்படுகின்றது. நாடு முழுவதும் உள்ள 12 பிராந்திய எரிபொருள் களஞ்சியங்களில் மண்ணெண்ணெய் இல்லாமையால், கொலன்னாவையில் இருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்க வேண்டியுள்ளது. அத்துடன் கொழும்பு துறைமுகத்துக்கு வரும் 37 ஆயிரம் 500 மெற்றிக் தொன் டீசல் மற்றும் சுப்பர் டீசல் கொண்ட இரண்டு கப்பல்கள் டொலரைச் செலுத்தாத காரணத்தால் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-இ)

## இலங்கைக்கு விரைவில் உணவு நெருக்கடி

### விவசாயத்துறை நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.29

இலங்கையில் உள்ளூர் உணவு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்காவிடின், நாட்டு மக்கள் விரைவில் உணவு நெருக்கடியைச் சந்திக்க நேரிடும் என்று விவசாயத்துறை நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

நாட்டில் நெல் அறுவடை 45 வீதத்துக்கும் அதிகமாகக் குறைந்துள்ளது. பல்வேறு பகுதிகளில் யூரியா உரத்தின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. சில வர்த்தக நிலையங்களில் 50 கிலோ யூரியா உரமூடை 40 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. விலை உயர்வால் விவசாயிகள் யூரியா உரம் கொள்முதல் செய்வது குறைந்துள்ளது என்று வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மாற்றுத் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (க்-இ)

## சமூக முன்னேற்றக்கழக சமாசத்தால் மாணவர்கள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.29

சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசம் மற்றும் புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நீத்தார் நிகழ்வும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்ற கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத் தலைவர் இ.சாந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. (ச-இ)

## பொலிஸாரைக் கைது செய்ய பணித்த உத்தரவு இன்னமும் கிடைக்கவில்லையாம்

கொழும்பு, ஏப். 29

ரம்புக்கனைச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளைக் கைது செய்யுமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு இதுவரை பொலிஸ்மா அதிபருக்கு இன்னமும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ரம்புக்கனையில் அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போதே துப்பாக்கிச் சூட்டுப்பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்தின்போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பொலிஸாரைக் கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் உத்தரவு கிடைக்கப்பெற்ற பின்னரே மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஒ-14-இ)

## எஸ்.எஸ்.பியின் தொலைபேசி அழைப்புக்களைப் பெற உத்தரவு

கொழும்பு, ஏப். 29

ரம்புக்கனை ஆர்ப்பாட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டவேளை, முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி.கீர்த்திரத்னவுக்கு பல தொலைபேசி அழைப்புக்கள் கிடைத்தமை நீதிமன்றுக்கு தெரியப்படுத்தப்பட்டது. இதற்கமைய அவரின் தொலைபேசி அழைப்புக்களைப் பகுப்பாய்வு செய்து தரவுகளைப்பெற கேகாலை நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதுதொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் கேகாலை நீதிவான் வாசனா நவரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போதே அவரின் தொலைபேசி அழைப்புக்களின் தரவுகளைப் பெறுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-14-இ)



## நாவல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 29

"நினைத்தாலே இனிக்கும்", "அவளுக்கு என்று ஒரு மனம்", "சொல்லத்தான் நினைக்கிறேன்" ஆகிய நாவல்கள் அண்மையில் அச்சுவேலியில் வெளியிடப்பட்டன.

இலங்கைச் சுங்கத் திணைக்கள முன்னாள் உத்தியோகத்தரும் கனடா வாழ் தமிழ் எழுத்தாளருமான அருண் செல்லப்பா தனது நாவல்களை தாய்மண்ணுக்கு வருகைதந்து வெளியிட்டுள்ளார்.

நூல்களை அம்பாறை மாவட்ட முன்னாள் மேலதிக மாவட்டச் செயலர் இராமகிருஷ்ணன் செல்லத்துரை வெளியிட்டு வைத்தார். (ஒ-14)

## ரம்புக்கனை துப்பாக்கிப் பிரயோகம் பொலிஸாரின் நடவடிக்கையில் சந்தேகம்

### நீதிவான் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 29

ரம்புக்கனை துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸாரின் நடவடிக்கையில் சந்தேகம் உள்ளதாக கேகாலை நீதிமன்ற நீதிவான் வாசனா நவரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் கேகாலை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது ரம்புக்கனை சம்பவத்துடன் தொடர்புடைய சான்றுப் பொருளான எரிபொருள் தாங்கி ஊர்தி மீரிகம பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும், எரிபொருள் தாங்கி வரக்காபொல பிரதேசத்தில் விடப்பட்டுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

சான்றுப் பொருளான தாங்கியிலிருந்து நீதிமன்ற உத்தரவின்றி எரிபொருள் விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆர்ப்பாட்டத்தின் போது கலவரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே துப்பாக்கிப் பிரயோகம் நடத்த உத்தரவிட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி.கீர்த்திரத்ன நீதிமன்றில் தெரிவித்தார்.

கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி நிலைமையைக் கட்டுப்படுத்த முயன்றும் அது பயனளிக்காததால் நல்லெண்ண அடிப்படையிலே துப்பாக்கிப் பிரயோகம் நடத்த உத்தரவிட்டதாகவும் கூறினார்.

எனினும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்த உத்தரவிட்டவர்கள் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திய அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களையும் உடனடியாகக் கைது செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் சந்தேகநபர்கள் வெளிநாடு செல்லக்கூடும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நீதிமன்றில் விடுத்த கோரிக்கைக்கு அமைய சந்தேகநபர்கள் வெளிநாடு செல்வதைத் தடை செய்யுமாறும் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த நிலையிலே சான்றுப் பொருளான எரிபொருள் தாங்கி இல்லாமை மற்றும் பொலிஸார் வழங்கிய தகவல்கள் சந்தேகத்துக்குரியவை என்று நீதிவான் தெரிவித்தார்.

இதனையடுத்து வழக்கு எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஒ-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவதார்– 2 வெளியாகின ஒளிப்படங்கள்

நியூயோர்க், ஏப்.29
பல வருட எதிர்பார்ப்பின் பின் ஜேம்ஸ் கமரூனின் அவதார் -2 ஆம் பாகத்தின் முதல் ஒளிப்படங்களை டிஸ்னி நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது.
இந்தப் படத்தின் டீசர் அல்லது ட்ரைலர் மே 6 இல் திரையரங்கில் வெளியாகக்கூடும் எனக் கூறப்படுகிறது.
கடந்த 2009 ஆம் ஆண்டு ஜேம்ஸ் கமரூன் இயக்கத்தில் 1500 கோடி ரூபா பட்ஜெட்டில் வெளியாகி மாபெரும் வெற்றிபெற்ற படம் அவதார். இந்தப் படத்துக்கு 3 ஒஸ்கார் விருதுகள் கிடைத்தன.
இந்த நிலையில் அவதார்- 2 ஐ 2021 ஆம் ஆண்டு வெளியிட இருந்த நிலையில் கொரோனாவால் இந்தப் படம் 2022 ஆம் ஆண்டு வெளியாகும் என்று ஒத்திவைக்கப்பட்டது.
3டியில் உருவாகியுள்ள இந்தப் படம் 160 மொழிகளில் இந்த வருடம் செப்ரெம்பரில் வெளியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# கொரோனாவால் திணறும் சீனா

பீஜிங், ஏப்.29
கொரோனாத் தொற்று மீண்டும் சீனாவைத் திணறடித்து வருகிறது. அந்த நாட்டின் வர்த்தக தலைநகர் ஷாங்காய் நகரில் கொரோனா ஜெட் வேகத்தில் பரவி வருகிறது. அங்கு ஒரேநாளில் 58 பேர் கொரோனா தொற்றுக்கு பலியாகியுள்ளனர்.
ஷாங்காய் நகர் போல் பீஜிங்கிலும் தொற்றுப் பரவல் வேகமெடுத்து வருகிறது. இதனால் ஷாங்காய் நகரைப் போல பீஜிங்கிலும் ஊரங்கு நடைமுறைப்படுத்தப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# ருவிற்றரை அடுத்து 'கொக்கோ கோலா''?



**வொஷிங்டன், ஏப்.29**
**ருவிற்றரை தன்வசப்படுத்திய எலான் மஸ்க் அடுத்து கொக்கோ கோலா, மெக்டொனால்ட்ஸ் ஆகிய நிறுவனங்களை வாங்கப் போவதாக ருவிற்றரில் பதிவிட்டுள்ளார்.**

ருவிற்றர் நிறுவனத்தை கைவசப்படுத்திய எலான் மஸ்க் தற்போது அடுத்தடுத்து அதிரடி அறிவிப்புக்களை வெளியிட்டு வருகிறார்.
பிரபல சமூக வலைத்தளங்களில் ஒன்றான ருவிற்றரை உலகின் முன்னணி கோடீஸ்வரரும் ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் டெஸ்லா ஆகியவற்றின் நிறுவுநருமான எலான் மஸ்க் ருவிற்றர் நிறுவனத்தின் 100 வீத பங்குகளையும் 44 பில்லியன் அமெரிக்க டொலருக்கு வாங்கியுள்ளார்.
இந்த நிலையில் ருவிற்றர் நிறுவனத்தின் உரிமையாளரான எலான் மஸ்க் ருவிற்றரில் பல்வேறு பதிவுகளை வெளியிட்டுள்ளார்.
அதில் சமூகவலைத்தளத்தை மகிழ்ச்சியாகவே அதிகம் பயன்படுத்துவோம். அத்துடன் கொக்கோ கோலா, மெக்டொனால்ட்ஸ் ஆகிய நிறுவனங்களை வாங்கப் போகிறேன் என ருவிற்ற ரில் கிண்டலாகப் பதிவிட்டுள்ளார்.
அடுத்தடுத்து ருவிற்றரில் கருத்துக்களை தெரிவிக்கும் எலான் மஸ்க் உலக அளவில் தற்போது பேசுபொருளாகியுள்ளார். (ச-இ)

# தேர்த் திருவிழாவில் மின்தாக்கி 11 பேர் பலி!

சென்னை, ஏப்.29
தஞ்சாவூர் அருகே இடம்பெற்ற தேர்த்திருவிழாவில் மின்சாரம் தாக்கியதில் இரண்டு சிறுவர்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். 16 பேர் வரையில் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
தேர்த்திருவிழாவில் தேரைத் திருப்ப முற்பட்டபோது தேர் கட்டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள உயர்மின்னழுத்த கம்பியில் உரசியதால் மின்விபத்து ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.
11 பேர் உயிரிழந்த இந்த நெஞ்சை உலுக்கும் சம்பவத்துக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.
அத்துடன் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5 லட்சம் ரூபா முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். உயிரிழந்தவர்களுக்கு சட்டப்பேரவையில் 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-இ)

# சீனாவில் பறவைக்காய்ச்சல் மனிதர்களுக்குப் பரவியது

பீஜிங், ஏப்.29
சீனாவில் ஹெனான் மாகாணத்தில் முதல் முறையாக பறவைக் காய்ச்சல் மனிதருக்குப் பரவியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.



பறவைக் காய்ச்சலின் 'எச்3 என்8' எனும் திரிபு, முதல் மனித நோய்த் தொற்றைப் பதிவு செய்துள்ளதாக சீனாவின் தேசிய சுகாதார ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
காய்ச்சல் உள்ளிட்ட பல அறிகுறிகள் காணப்பட்ட 4 வயதுச் சிறுவனுக்கே இந்தத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. (ச-இ)



# ரூபிளில் வர்த்தகம் மேற்கொள்ள 10 ஐரோப்பிய நாடுகள் இணக்கம்

மொஸ்கோ, ஏப்.29
10 ஐரோப்பிய நாடுகளின் எரிவாயு நிறுவனங்கள் ரஷ்யாவிடமிருந்து ரூபிளில் எரிவாயு வர்த்தகத்தை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளன என ரஷ்ய எரிவாயு நிறுவனம் கேஸ்ப்ரோம் தெரிவித்துள்ளது.
இதில் 4 நிறுவனங்கள் ஏற்கனவே ரூபிளில் கட்டணத்தைச் செலுத்தி விட்டன எனவும் விரைவில் இவர்களுக்கு எரிவாயு விநியோகம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.
உக்ரைன் - ரஷ்யப் போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து ரஷ்யா மீது பல நாடுகள் பொருளாதாரத் தடை விதித்தன. இதற்குப் பதிலடியாக எரிவாயுவுக்கான கட்டணத்தை அமெரிக்க டொலருக்குப் பதிலாக ரூபிளில் மட்டுமே செலுத்த வேண்டும் எனவும் ரூபிள் வர்த்தகத்துக்கு சம்மதிக்காத நாடுகளுக்கு விற்பனை நிறுத்தப்படும் எனவும் ரஷ்யா அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நண்பர்களின் பணத்தேவையைத் தீர்த்து வைப்பீர்கள். எதிர்பாராத நற்செய்தி ஒன்று வரும். நட்பு வட்டம் விரியும். உங்களுக்குத் தேவையான புதிய விஷயத்தை கற்றுக்கொள்வீர்கள்.

**இடபம்:** சிறு செயல்கள் மூலம் மற்றவருக்கு நன்மை செய்வீர்கள். நண்பர்களின் வழிகாட்டுதலால் ஜெயிப்பீர்கள். பயம் தீரும். குழந்தைகளைப் பற்றி இருந்து வந்த கவலைகள் மறையும்.

**மிதுனம்:** மன அழுத்தத்தினால் நிம்மதியைக் குலைத்துக் கொள்ளாதீர்கள். உங்களின் வழிகாட்டுதலால் பலர் நன்மை அடைவர். முந்தைய உழைப்புக்கான பலன் கிடைக்கும்.

**கடகம்:** பிறரிடம் நன்றி உணர்ச்சியை எதிர்பார்த்து ஏமாற்றம் அடையாதீர்கள். தந்தையின் ஆசி கிடைக்கும். தொழிலில் லாபம் பெருகும். வீண் வாக்குவாதம் செய்யவேண்டாம்.

**சிம்மம்:** உங்களின் முயற்சியால் பணியிடத்தில் பாராட்டுக் கிடைக்கும். அதிர்ஷ்டம் அதிகரிக்கும். தோற்றத்தில் கவர்ச்சி கூடும். குடும்பத்தில் உள்ள பெரியோருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள்.

**கன்னி:** பிறரை நம்பிய செயல் ஒன்று வெற்றிகரமாக நிறைவேறும். தாய்மாமனின் உதவி கிடைக்கும். [illegible] அதிகரிக்கும். ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். நிம்மதி கிடைக்கும்.

**துலாம்:** திருப்தியும், மகிழ்ச்சியும் ஏற்படும். குடும்பத்தினர் உங்களைப் பாராட்டுவர். தடைப்பட்டுவந்த வேண்டுதல் இன்று நல்லபடியாக நிறைவேறும். சிரமங்கள் நீங்கி மகிழ்ச்சி கிடைக்கும்.

**விருச்சிகம்:** ஆசிரியரிடம் பாராட்டுப் பெறுவீர்கள். உற்சாகமான நாள். பணியிடத் தொல்லைகளைச் சமாளிப்பீர்கள். நண்பர்கள் பாராட்டுவர். உங்களது சேவை பலராலும் இன்று பாராட்டப்பெறும்.

**தனுசு:** உழைப்புக்குஏற்ற ஊதியத்தைப் பெறுவீர்கள். நிதிநிலை சீராகும். குழந்தைகளால் நிம்மதி ஏற்படும். சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள். பணியில் தகுதிக்கேற்ப பதவி உயர்வு கிடைக்கும்.

**மகரம்:** வங்கிக்கணக்கில் இருப்புத் தொகை உயரும். கடன் தீரும். துயரங்கள் காணாமற்போகும். யோகமான நாள். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். நற்பெயர் வாங்குவீர்கள்.

**கும்பம்:** பேச்சினால் எதிலும் வெற்றி காண்பீர்கள். மகிழ்ச்சியான நாள். இன்றைய செயலில் நன்கு யோசித்து முடிவு எடுங்கள். ஆரோக்கியம் பற்றி இருந்து வந்த பயம் நீங்கும்.

**மீனம்:** யாருக்கும் வாக்குக்கொடுக்காதீர்கள். அமைதி ஏற்படும் நாள். பணியிடத்தில் எதிர்பாராத நன்மை வரும். மகிழ்ச்சி உண்டாகும். உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசியப் பொருள்களுக்கு சதொசவிலும் பெரும் தட்டுப்பாடு

கொழும்பு, ஏப்.29

லங்கா சதொச விற்பனை நிலையங்களில் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

சில வாடிக்கையாளர்கள் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு சதொச கிளைகளுக்குச் சென்று, வெறுங்கையுடன் வீடு திரும்ப நேரிட்டுள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள சகல சதொச கிளைகளும் பொருள்களின்றி வெறுமையாகக் காணப்படுகின்றன.

அதேவேளை, சில சுப்பர் மார்க்கெட்டுகளில் ஒரு கிலோ சிவப்பு அரிசி 145 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. அங்கும் வாடிக்கையாளர் ஒருவருக்கு அதிகபட்சமாக மூன்று கிலோ வரை மாத்திரமே கொள்வனவு செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## மண்ணெண்ணெய் வாங்க கட்டுப்பாடுகள்

வவுனியா, ஏப்.29

வவுனியாவில் மண்ணெண்ணெய்க்காக நீண்டவரிசையில் காத்திருப்போருக்கு கட்டுப்பாடுகளுடன் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். அதன்படி ஒருவருக்கு 500 ரூபா என்ற அடிப்படையிலேயே மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

நீண்டவரிசையில் பலமணிநேரம் காத்திருந்து பெற்றுக்கொள்ளும்போது இவ்வாறு கட்டுப்பாடுகள் விதிப்பது பெரும் சிரமத்தை ஏற்படுத்துகிறது என அவர்கள் மேலும் கவலை வெளியிட்டுள்ளனர். (ச-110)

## சாவகச்சேரி நகர சந்தியில் பொலிஸ் பாதுகாப்புச் சாவடி

சாவகச்சேரி, ஏப்.29

சாவகச்சேரி நகரப்பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கைக்கு அமைய நகர சந்தியில் நிரந்தர பொலிஸ் பாதுகாப்புச் சாவடி திறக்கப்பட்டுள்ளது.

நகரப்பகுதியில் இடம்பெறும் திருட்டுக்கள், வாகன விபத்துக்கள் மற்றும் மதுபோதையில் ஏற்படுத்தும் அட்டகாசங்கள் போன்றவற்றைக் கட்டுப்படுத்த இந்தப் பாதுகாப்புச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது.


நகர சந்தியில் நீண்டகாலமாக படையினர் இரவு பகலாக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலையில் நகரசந்தி, தனங்களப்பு வீதியில் பொலிஸ் சாவடி அமைக்கப்பட்டுள்ளது. (ச-9)

## போராட்டங்களில் ஈடுபடுவதற்கு சாணக்கியனுக்கு மன்று தடை



கொழும்பு, ஏப். 29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்களில் ஈடுபடுவதற்கு நீதிமன்றம் தடையுத்தரவு வழங்கியுள்ளது. கஙுவாஞ்சிக்குடி பொலிஸாரால் இந்தத் தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது. (ம)



## மானிப்பாய் விபத்தில் இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப்.29

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இளவாலைநோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த 24 வயதுடைய இளைஞரை சண்டிலிப்பாய் சந்திப் பகுதியில் டிப்பர் வாகனம் ஒன்று மோதித் தள்ளிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதனையடுத்து மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரின் இரண்டு கால்களிலும் பலத்த காயங்கள் ஏற்பட்ட நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-125)

## அதிக விலைக்கு விற்பனை செய்ய மாற்றப்பட்ட எரிபொருள் தாங்கி

### விசாரணை ஆரம்பம்

பொலநறுவை அரிசி ஆலைக்கு எடுத்துச்செல்லப்பட்ட எரிபொருள் தாங்கி ஊர்தியொன்று, அதிக விலையை எதிர்பார்த்து, கொழும்பு துறைமுக நகரத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பெற்றோலியக் கூட்டுதாபனம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. 33 ஆயிரம் லீற்றர் எரிபொருளைத் தாங்கிய ஊர்தி, பொலநறுவை அரிசி ஆலைக்குக் கொண்டு செல்லப்படவிருந்தது. எனினும் அது கொழும்பு துறைமுக நகரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டமை தொடர்பில், கொலன்னாவை எரிபொருள் மொத்தக் களஞ்சிய முனையத்துக்குத் தகவல் கிடைத்தது. பின்னர் துறைமுகப் பொலிஸாரின் கண்காணிப்பை அடுத்து, குறித்த தாங்கிஊர்தி கொலன்னாவை எரிபொருள் மொத்தக் களஞ்சிய முனையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பில் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கத்திடம் கேட்ட போது; அதிக விலைக்கு எரிபொருளை விற்பனை செய்வதற்காக குறித்த தாங்கி ஊர்தி அங்கு கொண்டு செல்லப்பட்டது -என்றார். (க-இ)

## சிற்றுண்டிகளின் விலை மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.29

சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டுள்ளதை அடுத்து, தேநீர், பால் தேநீர், உணவுப்பொதி, அப்பம், பரோட்டா, கொத்து உட்பட சிற்றுண்டிகளின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்குவரும் வகையில், லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. சமையல் எரிவாயு விலை அதிகரிப்புக்கு அமைவாக, சிற்றுண்டிகளின் விலையை தாம் விரும்பியவாறு அதிகரிக்க உரிமையாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனால் சிறிய உணவகங்களின் தொழிற்றுறை வீழ்ச்சியடையும். எனினும் பொருள்களின் விலைக்கேற்பவே தொழிற்றுறையை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்று சிற்றுண்வக உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். அதேவேளை, அண்மையில் கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டமையும் சிற்றுண்டிகளின் விலையை அதிகரிக்கச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## அரச நிறுவனங்கள் வருமானத்தை திறைசேரிக்கும் அனுப்பவேண்டும்

### 'கோப்' குழுவின் தலைவர் தெரிவிப்பு

அரசாங்க நிறுவனங்களின் வருடாந்த வருமானம், திறைசேரிக்கு உரிய முறையில் கிடைக்கப்பெறவேண்டுமென்று கோப் குழுவின் தலைவர் சரித ஹேரத் தெரிவித்தார்.

மரக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் அதன் செயற்றிறன் தொடர்பில் மதிப்பீடு செய்வதற்கான கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். தளபாடங்கள் தயாரிக்கும்போது பெரியளவிலான மரங்கள் விரயம் செய்யப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அகற்றப்படும் மரங்கள்மூலம் துணை உற்பத்திகளைத் தயாரிப்பதன் ஊடாக இந்த நட்டத்தை ஓரளவுக்குக் குறைத்துக்கொள்ள முடியும் என்று கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்தார். தளபாட உற்பத்தி தொடர்பில் போதிய அறிவுடைய பணியாளர்கள் இன்மை, சந்தையில் தனியார் துறையினருடன் போட்டியிட வேண்டிய நிலைமை ஆகியவை இதற்குக் காரணம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களைநாசினி இறக்குமதி: கட்டுப்பாடுகள் நிறுத்தம்

கொழும்பு, ஏப்.29

பூச்சிக்கொல்லிகள், களை நாசினிகள் மற்றும் பூஞ்சைக் கொல்லிகளை இறக்குமதி செய்வதற்கான கட்டுப்பாடுகளுடனான திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது என்று விவசாய மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் ஜானக வகும்புர தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக பூச்சிகொல்லிகள், களை நாசினிகள் மற்றும் பூஞ்சைக் கொல்லிகளை பதிவாளரால் அங்கீகரிக்கப்பட்ட உரிமம் பெற்ற இறக்குமதியாளர்கள் இறக்குமதி செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## காணி...

திணைக்களத்தினர் அங்கு சென்ற நிலையில், அந்தப் பகுதி மக்கள் திரண்டு அதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர். அந்தப் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டிருந்த நிலையில், அவர்கள் மக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர்.

ஆயினும் பொதுமக்களும், அந்தப் பகுதி மக்கள் பிரதிநிதிகளும், பொது அமைப்புக்களும், கடற்றொழில் சங்கமும், மதத் தலைவர்களும் காணி சுவீகரிப்புக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இறுதியில் நில அளவீடுகளை கைவிட்டு, நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் அங்கிருந்து புறப்பட்டனர்.

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலைமையில், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் தமிழ் மக்கள் பங்களிக்க வேண்டும் என்று தெற்கில் இருந்து அழைப்புக்கள் வெளியாகும் அதேநேரத்தில், தமிழர் பூர்வீக நிலங்களைப் பறிக்கும்நடவடிக்கைகள்தொடர்ந்தும்முன்னெடுக்கப்படுகின்றது என்று தமிழ் மக்கள் விசனம் தெரிவித்தனர். (அ-எ-இ)

## யாழில்...

சுறுத்தி பணம் மற்றும் கைபேசிகளை அபகரித்த கும்பலைச் சேர்ந்த இருவர் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று இளைஞர் ஒருவரிடம் 6 ஆயிரம் ரூபா பணம் மற்றும் அலைபேசியை அபகரிக்கப்பட்ட நிலையில், அது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட இருவர் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகரில் கடந்த ஒரு வாரத்துக்குள் 3 வெவ்வேறு சம்பவங்களில் இளைஞர்களை அச்சுறுத்தி பணம் மற்றும் அலைபேசிகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

இளைஞர்களை மறித்து "எமது சகோதரியுடன் கைபேசியில் உரையாடுகிறாய், அவருடைய படத்தை பணப்பையில் (பேஸில்) வைத்திருக்கிறாய்" என்று அச்சுறுத்திவிட்டு சோதனையிடுவது போன்று பாவனை செய்து அவர்களிடமிருந்து அலைபேசி மற்றும் பணத்தை அபகரித்து கும்பல் ஒன்று தப்பித்து வந்துள்ளது.

இந்த நிலையில் 4ஆவது சம்பவமாக யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் இளைஞர் ஒருவரை அதேபாணியில் அச்சுறுத்தி 6 ஆயிரம் ரூபா பணம் மற்றும் பெறுமதியான அலைபேசியை இருவர் அபகரித்துச் சென்றனர். சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 22 மற்றும் 24 வயதுடைய இருவரைக் கைது செய்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 6 ஆயிரம் ரூபா பணம் மற்றும் இரண்டு அலைபேசிகள் கைப்பற்றப்பட்டன.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் இருவரும் நீதிமன்ற நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

## விபத்தில்...

புதுக்காட்டுச் சந்தியில் இருந்து மருதங்கேணி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும், மருதங்கேணியில் இருந்து புதுக்காட்டுச் சந்தி நோக்கி வந்த கப்ரக வாகனமும் மோதி விபத்து நடந்துள்ளது.

விபத்தை அடுத்து அந்தப் பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டதை அடுத்து பொலிஸார் நிலைமைகளைக் கட்டுப்படுத்தினர். இந்த விபத்துத் தொடர்பாக பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-113)

## ரம்புக்கனைச்...

பில், துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்ட கேகாலைப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி.கீர்த்திரத்ன நேற்று இரவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி. கீர்த்திரத்னவின் குழுவில் அங்கம் வகித்த 3 பொலிஸ் கொன்ஸ்டாபிள்களும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர் திடீர் உபாதைகளைக் காரணம் காட்டி மருத்துவமனைகளில் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தகவல் வெளியாகியிருந்தது. இந்தநிலையில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் அவர்களில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-எ-26)

## ஆர்ப்பாட்டத்தில்...

காலை முதல் பெருந்தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கொழும்பு - பதுளை பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் உடல் களைப்பு காரணமாக வீதி ஓரத்தில் அமர்ந்திருந்த நிலையில் திடீரென உயிரிழந்துள்ளார்.

தங்கமலை பகுதியை சேர்ந்த 48 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் தற்போது ஹப்புத்தளை பிரதேச மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)


### வேலையாட்கள் தேவை

முறுகண்டியில் இயங்கும் சைவ உணவகம் மற்றும் உணவு உற்பத்தி நிறுவனத்திற்கு

- சமையலாளர்
- காசாளர்
- மனேஜர்
- உணவு பரிமாறுபவர்
- உதவியாட்கள் உடன் தேவை.

தொடர்புக்கு:- 077 3866 250


### முதலாம் ஆண்டின் நினைவு அஞ்சலி



மண்ணில் 09.12.1933

விண்ணில் 10.05.2021

**திருமதி தாமோதரலிங்கம் அருட்செல்வம்**

பறாளாய் ஈஸ்வரவிநாயகர் முருகனின்
திருவடியின் அருளால் நற்கதி அடைந்தார்.
எங்கள் அம்மா இறந்தும் இறவாமல்
எம் இதயங்களில் தெய்வச்
சுடரொளியாய் வீற்றிருப்பார்.
என்றும் உங்களை மறவாத

தாமோதரலிங்கம் பிள்ளைகள் மருமக்கள்
சுழிபுரம் மத்தி, சுழிபுரம். பேரப்பிள்ளைகள்
(அவுஸ்திரேலியா.)

(CS 19543)1-6


### வேலையாட்கள் தேவை

யாழில் உள்ள பலசரக்கு மொத்த விற்பனை நிலையத்திற்கு

- கணினி பதிவாளர்
- மனேஜர்
- சிட்டை எழுதுநர் (Bill Clerk)
- களஞ்சிய பொறுப்பாளர் உடன் தேவை.

ஆண், பெண் இருபாலாரும்

தொடர்புக்கு:- 076 0094 946


### மு/குமுழமுனை மகாவித்தியாலயம்

**பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்**

காலம் : 14.05.2022 சனிக்கிழமை
முற்பகல் 9.30 மணிக்கு

இடம் : பாடசாலை பிரார்த்தனை மண்டபம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர்,
மு/ குமுழமுனை ம.வி

(CS19534) (2.6)


### வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு இரவு நேர கிராபிக் டிசைனர் (Graphics Designer) தேவை. (முழுநேரம் / பகுதி நேரம்)



ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிபரக் கோவையுடன் 02.05.2022 திங்கட்கிழமை மாலை 05.00 மணிமுதல் 7.00 மணிவரை நேரில் சமூகம்தரவும்.

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


### கண்ணீர் அஞ்சலி



எமது நடனத்துறை தற்காலிக போதனா ஆசிரியர் செல்வி ஆதித்தியா ஜெயபாலன் அவர்களின் அன்பு அம்மம்மா

**திருமதி இராசேஸ்வரி இலங்கநாதன்**

அவர்கள் கடந்த 26.04.2022 செவ்வாய்க்கிழமை காலமான செய்தி அறிந்து மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்
நடனத்துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

### கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 17.08.1961

மறைவு 28.04.2022

எமது கல்லூரியில் அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றும் திருமதி நிஷானி குமணனின் அன்புத் தாயார்

**சிவசக்தி ஆனந்தராசா கமலாதேவி**

அவர்கள் 28.04.2022 காலமானார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கல்விசாரா ஊழியர்கள்
நலன்புரிச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய்க்குட்டி விற்பனைக்கு

சாவகச்சேரிப் பகுதியில் நல்ல இன கிரேடன் ஆண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.

**077 659 0606**

## கடை வாடகைக்கு

பருத்தித்துறை வீதி, மூன்றாம் கட்டை, கல்வியங்காடு (யாழ்ப்பாணம்) அமைந்துள்ள **நான்கு கடைகள்** வாடகைக்குண்டு.

(cs19297) (2.6)

**077 175 0746, 077 806 9790**

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் பலாலி வீதி கோண்டா வில் சந்தியில் இருந்து 600 M தூரத்தில் 3 3/4 பரப்புக்காணி 1 3/4 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

**T.P:077 986 6444**

## யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விடுதியில் தங்கி இருந்து கல்வி கற்க**

**இலவச அனுமதி**

எமது பாடசாலையில் ஆண், பெண் விடுதி இரண்டும் இயங்கி வருவதால் கடந்த வருடம் தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு இலவசமாக விடுதியில் தங்கி இருந்து கல்வி கற்பதற்கு பழைய மாணவர்கள் நிதியுதவி வழங்க முன்வந்துள்ளார்கள். விரும்புபவர்கள் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்பு: அதிபர், (021 222 3456 பாடசாலை நேரத்தில் தொடர்புகொள்ளவும்)**

(cr.37899) (2.6)


## கண்ணீர் அஞ்சலி




யா/கன்னியர் மடம் மகாவித்தியாலயம் ஆசிரியை திருமதி ஜெனிற்றா மரியானந்தராசா அவர்களின் பாசமிகு தாயார் **பிலோமினம்மா யோசப்** அவர்கள் நேற்றைய தினம் (28.04.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தோற்றம் 05.07.1935

மறைவு 28.04.2022

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/கன்னியர் மடம் மகாவித்தியாலயம் இளவாலை

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்லையா மகாதேவன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

*திதி: தேய்பிறை சதுர்த்தி*

பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய்
எமக்கு வழிகாட்டி வாழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் ஐந்து மறைந்தது அப்பா!
ஆனால் உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் இருந்து ஒருபோதும்
– மறைந்ததில்லை.
உங்களுடைய ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

தோற்றம் 09.01.1937

மறைவு 25.04.2017

கோப்பாய் வீதி,
1ம் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு.

குடும்பத்தினர்

## வீட்டுக்கிருத்திய நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது



அமரர் திருமதி **அன்னலட்சுமி சங்கரப்பிள்ளை**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் **எதிர்வரும் (03.05.2022) செவ்வாய்க்கிழமை இணுவில் அறிவாலயத்தில் நடைபெறவிருந்த வீட்டுக்கிருத்திய நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.**

குடும்பத்தினர்
**கோவில் வாசல், இணுவில் மேற்கு.**

(cs 19533) (2.6)

### நாட்டில்...

வலியுறுத்தி யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனை முன்பாகத் திரண்ட மருத்துவபீட மாணவர்கள், "அரசே வெளியேறு" என்ற கோஷத்துடன், சந்திரச் சந்தியை அடைந்து, முட்டாஸ் கடைச் சந்தி ஊடாகச் சென்று ஈ.பி.டி.பி. அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அங்கிருந்து ஆரியகுளம் சந்தி ஊடாக யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையை அடைந்தனர்.

"கோத்தா கோத்தா வீட்டுக்கு போ", "சாப்பிடவில்லை பருப்பு உனக்கு எதுக்கு பொறுப்பு?", "குடும்ப ஆட்சி உடைஞ்சு போச்சு இளைய தலைமுறை இறங்கியாச்சு", "நாட்டில் மருந்து இல்லை உனக்கு எதுக்கு விருந்து?", "நாம்கற்பது நோயாளி இறப்பதை காணவா?" என்பன போன்ற கோஷங்கள் மாணவர்களால் எழுப்பப்பட்டன. (அ-எ-125)

## மரண அறிவித்தல்



### திருமதி சிவசக்திஆனந்தராசா கமலாதேவி

அச்செழுவைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவசக்திஆனந்தராசா கமலாதேவி நேற்று (28.04.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவசக்திஆனந்தராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அமுதலிங்கம் - செல்லப்பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சற்குணம் தம்பதியரின் அன்பு மருமகளும், நிசானி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரி), கிருசாந் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகுணன் (SKY - Builders), பிரதாபன், அருந்ததி, மாலதி (அபிவிருத்தி உத்தியோகத்தர் சமுர்த்தி வங்கி - சிறுப்பிட்டி), பிரசாத் (மதுசில்க் யாழ்ப்பாணம்), உமாசங்கர், சுதர்சன், சர்மிலா, சுபாசினி, கஜீவன், கதீசன், கஜேந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், அருந்தவராசா, சாந்தினிதேவி, காலஞ்சென்ற சந்திரசேகரம் மற்றும் சந்திரகுமாரி, பகீரதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அபிசா, விதுசன், மதுசிகன், யதுசிகன், விதுசிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிருசன், சாதுசன் ஆகியோரின் பெரியதாயாரும், சிவலிங்கராசா, சிவஞானமலர், காலஞ்சென்ற சந்திராதேவி, சிவயோகமலர் மற்றும் தயாநிதி (ஆசிரியை - யாழ் - நீர்வேலி றோ.க.பாடசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2022) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு, நீர்வேலி.
077 662 6151
077 592 5663

தகவல்
கணவர்
செ. சிவசக்திஆனந்தராசா

(CR 7947)

## மரண அறிவித்தல்

மலர்வு 10 . 10 . 1953



உதிர்வு 27 . 04 . 2022

### அந்தோனிப்பிள்ளை சந்திரகுமார்

(சித்தப்பா)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சித்தப்பா என அன்பாக அழைக்கப்படும் அந்தோனிப்பிள்ளை சந்திரகுமார் கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரைராசா ராணி தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயாவின் அன்புக் கணவரும், டிவாகர், டிஸ்மன், றெபேக்கா, ஆரோன், சலோமி (பாஷையூர் சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலய மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் பத்திநாயகி (தேவி), காலஞ்சென்ற சிமிலிகுமார் மற்றும் பிலோமினா (கலா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தங்கமணி, பியசேனா மற்றும் ஆசன், யேசுராசா, ஜீவா, சிலீடன், எடிசன், மேக்கேஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

சென். மேரிஸ் 2 ஆம் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (29.04.2022) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நல்லடக்க ஆராதனை இடம்பெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக வசந்தபுரம் அப்போஸ்தல சபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்.மேரிஸ் 2ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை.


தகவல்:
குடும்பத்தினர்.

(CS 19544) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## இராமையா பரமநாதன்



தோற்றம் 23.02.1945 மறைவு 26.04.2022

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மடத்தடி மேற்கு, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இராமையா பரமநாதன் கடந்த (26.04.2022) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குமாரவேலு - கனகம்மா தம்பதியரின் மருமகனும், லிங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி மற்றும் கண்ணையா, கோமதி, உமாமகேஸ்வரி (லண்டன்), கேதீஸ்வரி (லண்டன்), தேசிங்கராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும், சகுந்தலா தேவி, சித்திரன், லிங்கேஸ்வரன், சிவனேஸ்வரன் (சுவிஸ்), றஞ்சிதமலர், சாந்தகுமார் (சுவிஸ்), சந்திரகுமாரி (சுவிஸ்), ஜெயக் குமார் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், பிறேம்காந், பிறேம் கல்பனா, பிறேம்சுகந் ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்த குமாரி, பத்மசிறி, விஜிதா ஆகியோரின் மாமனாரும், கபிலா, தபிதா, அபிசா, சர்மிகா, தமிதா, கரீஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**மடத்தடி மேற்கு வீதி,**
**சாவகச்சேரி வடக்கு,**
**சாவகச்சேரி.**
**076 303 7648**

(cs 19542) (4/6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## திரு. அழகையா விக்றர் ஜெயரட்ணம்



தோற்றம் 29.03.1933 மறைவு 07.04.2022

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் பிரித்தானியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. அழகையா விக்றர் ஜெயரட்ணம் கடந்த (07.04.2022) அன்று பிரித்தானியா வில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் பெஞ்சமின் அழகையா (நீர்ப்பாசன பொறியியலாளர், திருநெல்வேலி, அனுராதபுரம்), ராசமணி யாக்கோப் (மலேசியா, காரைநகர்) தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான ஜேம்ஸ் ஐயம்பிள்ளை தம்பிஐயா (புங்குடுதீவு, ஆவரங்கால்) இராசம்மா தம்பிஐயா (பருத்தித்துறை நல்லூர்) தம்பதியரின் மருமகனும், சுசிலா ஜெயரட்ணம் (தம்பிஐயா) அவர்களின் பாசமிகு கணவரும், கல்யாணி பரமானந்தம் (U.K) தாரணி (தாரா) ஜெயரட்ணம் (USA, தற்போது (U.K), சுமந்தினி (சுமா) ஜெயரட்ணம் (USA) அவர்களின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற வில்பிறட் தயாளராஜா, ஆர்த்த ரட்ணராஜா (கனடா), காலஞ்சென்ற அல்பிரட் துரைரட்ணம், சாள்ஸ் தங்கராஜா (இலங்கை) மற்றும் காலஞ்சென்ற ஜோர்ஜ் தேவபாலன் ஆகியோரின் சகோதரனும், கமலா அலோசியஸ், இந்திரா தம்பிஐயா (கனடா) ஆகியோரின் மைத்துனரும், கனகேந்திரன் பரமானந்தம் (U.K) முஹம்மது இலியாஸ் ஹசன் (USA) அவர்களின் பாசமிகு மாமனாரும், கோவலன், கோகிலா, றேகான் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். விக்றர் (இயந்திர பொறியியலாளராக கடமையாற்றிய 45வருடங்களில் 21 வருடங்கள் பொஸ்ட்வனாவில் கடமையாற்றி 2000 ஆம் ஆண்டு ஓய்வுபெற்றார்) இவரின் துணிச்சலான வாழ்க்கைப் பயணம் இலங்கையிலிருந்து மிக தொலைவிலுள்ள சாம்பியா, பொஸ்ட்வனா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு பயணிக்கவைத்தது. இவரின் ஆர்வங்களில் இலங்கையின் உணவு, நிழற்படமெடுத்தல் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பும் அடங்கும்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (30.04.2022) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு BST (இலங்கைநேரப்படி பிற்பகல் 2.30 மணிக்கு பிரித்தானியாவில் நடைபெறும்.

இறுதி நிகழ்வு : - சனிக்கிழமை (30 ஏப்ரல் 2022)
மு.ப 10.00 BST (பி.ப 2.30 இலங்கை நேரம்)
Elim Pentecostal Church, Hainault Road, London, E11 1EL, England.
இலங்கையிலிருக்கும் நண்பர்கள் மற்றும் நலன்விரும்பிகள் கீழ்வரும் youtube தளத்தினூடாக இறுதி நிகழ்வில் பங்குபெறலாம்.
https://www.youtube.com/watch?v=T6Zns6c1jr0.
தொடர்புகொள்ள RSVP@jayaratnam.com
8 829 587 (WhatsApp/ calls).

(cr.35905) (3.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 • 03 • 1955



மறைவு 27 • 04 • 2022

## திரு. சண்முகம் சிங்கரட்ணம்

பத்தமேனி அச்சுவேலியை பிறப்பிடமாகவும், 23 / 16, முதலியார் லேன், நல்லூர் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சண்முகம் சிங்கரட்ணம் நேற்றுமுன்தினம் (27.04.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கெங்காலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராஜேஸ்வரி (கனடா) தம்பதியரின் அன்பு மருமகனும், கஜதீபா (கனடா), லக்சாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகுந்தன் (கனடா), அரிகரன் ஆகியோரின் அன்புப் மாமனாரும், சியந்த், ஆருத், மிதுன் ஆகியோரின் அன்புப் பேரனும், பரஞ்சோதி (லண்டன்), கந்தசாமி (கனடா), சரஸ்வதி (கனடா), இராசா (கொழும்பு), சரோஜினிதேவி (நோர்வே) மற்றும் காலஞ்சென்ற செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுகிர்தாலட்சுமி (நோர்வே), கிருபாலட்சுமி, விஜயலட்சுமி, கெங்காதரன் (கனடா), தயாலட்சுமி (கனடா), சிறீதரன் (கனடா), நித்தியலட்சுமி (கனடா), ஜெயலட்சுமி (நோர்வே), காலஞ்சென்ற மயூரன் மற்றும் சுகபாணி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

23/16, முதலியார் லேன்,
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு: 021 222 9030
076 409 9413

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி...

இவ்வாறு தொழிற்சங்க கூட்டமைப்புக்களின் பிரதிநிதியும், ஜே.வி.பியின் மத்திய குழு உறுப்பினருமான வசந்த சமரசிங்க, தொழிற்சங்கங்களின் சார்பில் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், அவர் தலைமையிலான அரசும் உடனடியாக பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி நாடு தழுவிய ரீதியில் நேற்று பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்கங்கள், மின்சார சபை தொழிற்சங்கங்கள், சுகாதார தொழிற்சங்கங்கள், துறைமுக ஊழியர்சார் தொழிற்சங்கங்கள், தபால் துறைசார் தொழிற்சங்கங்கள், பொருளாதார மத்திய நிலையங்களில் உள்ள தொழிற்சங்கங்கள், வங்கிசார் தொழிற்சங்கங்கள் உட்பட மேலும் பல தொழிற்சங்கங்கள், பணிப்புறக்கணிப்பு போராட்டத்துக்கு ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன. பொருளாதார மத்திய நிலையங்கள், தொழில் பேட்டைகள் என்பனவும் மூடப்பட்டிருந்தன.

வர்த்தகர்களும் வர்த்தக நிலையங்களை மூடி, இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். அரசு பதவி விலக வேண்டும் எனவும் வலியுறுத்தினர். அரச மற்றும் 50 வீதமான தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டன. நேற்றைய தொழிற்சங்க நடவடிக்கை வெற்றியளித்துள்ளது என்று தொழிற்சங்க பிரமுகர்கள் தெரிவித்தனர்.

ராஜபக்ச குடும்பமும், இந்தக் கள்ள அமைச்சரவையும் பதவி விலக வேண்டும். மக்கள் தமக்குத் தேவையான ஆட்சியை முன்னெடுக்க இடமளிக்க வேண்டும். இல்லையேல் பதவியில் இருந்து விரட்டும் நடவடிக்கை 6 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும். ஆட்சியாளர்களை ஏழு கடல்களைத் தாண்டிச்சென்றாலும் விடமாட்டோம், கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை மீள நாட்டுக்கு கொண்டுவருவோம் என்று வசந்த சமரசிங்க குறிப்பிட்டார். (அ-எ-44)

## சு.கட்சி...

தீர்மானித்துள்ளன.

சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் சர்வகட்சி அரசமைப்பதற்கு கொள்கையளவில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இணக்கம் தெரிவித்துள்ளார். அது தொடர்பாகப் பேச்சு நடத்துவதற்கு ஆளுங்கட்சி மற்றும் நாடாளுமன்றத்தில் சுயாதீன அணிகளாகச் செயற்படும் கட்சிகளின் தலைவர்களுக்கு அவர் அழைப்பு விடுத்திருந்தார்.

ஆளுங்கட்சி மற்றும் சுயாதீன அணிகளுடன் முதற்கட்டமாக பேச்சு நடத்திய பின்னர், பிரதான எதிர்க்கட்சி உட்பட ஏனைய தரப்புகளுக்கும் அழைப்பு விடுக்கவே ஜனாதிபதி உத்தேசித்திருந்தார். எனினும், ஜனாதிபதியும், அவர் தலைமையிலான அரசும் பதவி விலகும் வரை, சர்வகட்சி அரசு என்ற கட்டமைப்பை ஏற்கமுடியாது என சஜித் பிரேதமாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆகியன அறிவித்துவிட்டன. இந்த இரு விடயங்களும் இடம்பெறும்வரை, சர்வகட்சி அரசுக்கு தாமும் தயாரில்லை என ஐக்கிய தேசியக்கட்சி நேற்று அறிவித்துள்ளது.

இந்தநிலையில் ஜனாதிபதி விடுத்த அழைப்பையேற்று கலந்துரையாடலில் பங்கேற்பதா ? அல்லது எத்தகையதொரு நடவடிக்கை எடுப்பது? என்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக 11 கட்சிகளின் கூட்டணியும், அநுரபிரியதர்சன யாப்பா தலைமையிலான சுயாதீன அணியும் மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் நேற்று மாலை கூடி ஆராய்ந்தன.

அரசுக்கு ஆதரவு வழங்கி இராஜாங்க அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்ட சாந்த பண்டார, சுரேன் ராகவன் ஆகிய இருவரையும் ஜனாதிபதி பதவி நீக்காவிட்டால், சந்திப்பில் பங்கேற்கப்போவதில்லை என சுதந்திரக்கட்சி முன்னர் நிபந்தனை விதித்திருந்தது. எனினும், சுதந்திரக்கட்சி கட்டாயம் பங்கேற்க வேண்டுமென ஏனைய 10 பங்காளிக் கட்சிகளும் விடுத்த அழைப்பையேற்று, முடிவை மாற்றி, சந்திப்பில் பங்கேற்க சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது. (அ-எ-44)

## டக்ளஸ்...

பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்த உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவியில் இருந்து விலகக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர் என்று ஆளும்கட்சியின் பிரதேசசபைத் தவிசாளர்கள்தீர்மானம்நிறைவேற்றியுள்ளனர் என்று நேற்றுமுன்தினம் பிரதமரின் ஊடகப் பிரிவு அறிவித்திருந்த நிலையில் நேற்று வேலணைப் பிரதேசசபையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வேலணைப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்று பிரதேசசபையின் சபா மண்டபத்தில் காலை 9 மணியளவில் ஆரம்பமானது. அமர்வுக்கு வந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 8 பேரும், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் கையில் கறுப்புப் பட்டி அணிந்தவாறு சபைக்கு வந்திருந்தனர்.

கறுப்புப்பட்டி அணிந்து வந்தமை தொடர்பில் சபையின் தவிசாளர் கருணாகர குருமூர்த்தி சபை ஆரம்பித்தபோது கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் அருளாந்தன் ஸ்ரீபத்மராசா, 'இந்தக் கேள்வி முறையற்றது என்று தெரிவித்ததுடன், தற்போது நாட்டின் பொருளாதார நிலைமை பாதிப்படைந்துள்ளதால், எமது வாழ்வியலும் பாதிப்படைந்துள்ளது. அதனால் இந்த அரசாங்கமும், அமைச்சரவையும் பதவி விலக வேண்டும் என்று ஏகமனதாக சபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்' என்று கூறினார்.

அப்போது சபையில் இருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும், பொதுஜன பெரமுன உறுப்பினர்களும், நீங்கள் முன்னரே கூறியிருந்தால் நாமும் சபைக்கு கறுத்தப் பட்டி அணிந்து வந்திருப்போம் என்று தெரிவித்தனர். அதையடுத்து கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தங்களின் கறுப்புப் பட்டிகளைக் கொடுத்தபோது நீங்கள் முன்னரே எமக்குக் கூறியிருக்க வேண்டும் இப்போது திடீரெனத் தருவதால் முடியாது என்று கறுப்புப் பட்டிகளைக் கட்டுவதற்குத் தயங்கினர். பின்னர் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த இருவர் கறுப்புப் பட்டிகளை வாங்கிக் கட்டிக்கொண்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஈ.பி.டி.பி. அமைப்பின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும், அரசாங்கத்துக்கும் எதிரான கோஷங்கள் சபையில் எழுப்பப்பட்டன. சபையில் இருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் அனுசியா, இது அரசியல். நீங்கள் கொண்டு வந்த தீர்மானத்தை நீங்களே நிறைவேற்றிவிட்டுச் செல்லுங்கள் என்று தெரிவித்தார்.

கூட்டமைப்பு மற்றும் ஐ.தே.க. உறுப்பினர்கள், உங்களுக்கு மட்டும் பொருளாதாரப் பிரச்சினை இல்லையா? மக்களுக்கு எதிராகச் செயற்பட்டு மக்களால் சபையை விட்டுக் கலைபடப் போகிறீர்களா என்று கேள்வி எழுப்பியதுடன், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வாக்கெடுப்புக்கு விட வேண்டும் என்று கோரினர்.

அதன்பின்னர் வாதப் பிரதிவாதங்களின் பின்னர், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்பேற்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் மஹிந்த உள்ளிட்ட அமைச்சரவை ( ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் இந்த அமைச்சரவைக்குள் அடங்குகின்றார்) பதவி விலக வேண்டும் என்று வேலணைப் பிரதேசசபை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றுகின்றது என்று சபையின் தவிசாளர் நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி தீர்மானத்தை வாசித்தார். (அ-எ-125)

## பதவியை...

விடவும் எனக்கு எனது சகோதரர் முக்கியம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார் என அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நேற்றிரவு ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

அதில் நாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, பொருள்களின் விலையேற்றம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன.

அதன்பின்னர் இடைக்கால அரசு தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இது சம்பந்தமான கருத்தாடலை இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ ஆரம்பித்து வைத்தார்.

இதற்கு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

"மொட்டுக் கட்சியின் ஆட்சிக்கே மக்கள் ஆணை வழங்கினர். இடைக்கால அரசுக்கு அல்ல." என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், பிரதமர் பதவிக்காக டலஸ் அழகப்பெரும சூழ்ச்சி செய்கின்றார் என டலஸ்மீது சரமாரியாக விமர்சனக் கணைகளையும் திஸ்ஸ குட்டியாராச்சி தொடுத்துள்ளார்.

இதன்போது குறுக்கிட்ட பிரதமர் மஹிந்த, "டலஸ் அழகப்பெருமவை எனக்கு நன்கு தெரியும். நான்தான் அவரை அரசியலுக்கு கொண்டுவந்தேன். ஒளிந்திருந்து தாக்கும் முதுகில் குத்தும் நபர் அவர் அல்லர் என்பது தெரியும்." என்று டலஸுக்காக குரல் கொடுத்துள்ளார்.

அதன்பின்னர் பவித்ரா உட்பட மேலும் சில மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைக்கால அரசமைக்கும் திட்டத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இடைக்கால அரசு தொடர்பாக ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கிடையே நேற்று காரசாரமான வாக்குவாதமும் இடம்பெற்றுள்ளது. பிரதமரே நிலைமையை சமரசப்படுத்தியுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

இறுதியில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, "பிரதமரை பதவி விலகுமாறு நான் ஒருபோதும் கோரவில்லை. எல்லாவற்றைவிடவும் எனக்கு எனது சகோதரர் முக்கியம். நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை (113) இருந்தால் எனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. அவ்வாறு இல்லாவிட்டால் 113 ஐ நிரூபிக்கும் தரப்புக்கு பிரதமர் பதவியை வழங்க வேண்டிய நிலைமை எனக்கு ஏற்படும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் தனக்கு பெரும்பான்மை பலம் இருக்கின்றது என்று இதன்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். (எ-44)

## தஞ்சம்...

போதைப்பொருள் கடத்தல் வழக்குகளுடன் தொடர்புடையவர்கள் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது என தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் இருவரையும் புழல் சிறையில் அடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று தமிழகத்தின் இராமநாதபுரம், தொண்டி கடற்கரையில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய இரு இளைஞர்கள் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டனர். விசாரணையில் அவர்கள், தாங்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், பொருளாதார நெருக்கடியால் தஞ்சம் கோரி வந்தோம் என்று தெரிவித்துள்ளனர்.

ஆயினும் அவர்களின் நடத்தையில் சந்தேகம் கொண்ட பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்தனர். அவர்களின் ஒளிப்படங்கள் இலங்கைக்கு அனுப்பி விசாரித்தபோது, அவர்களில் இருவர் மீதும் போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுக்கள் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதையடுத்து அவர்கள் இருவரும் சென்னை, புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தமிழக பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து பலர் தமிழகத்துக்கு குடும்பம் குடும்பமாக தஞ்சம் கோரிச் செல்கின்றனர். போதைப்பொருள் கடத்தல்காரர்களும் இந்த நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றனர். (எ-இ)

## உடைமையில்...

வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று மதியம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் பத்தமேனியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் என்றும், அவரிடம் இருந்து ஒரு கிராம் 750 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மந்துவில் சிறீபாரதி வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.
சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஓய்வு நிலை பிரதி அதிபர் த.பாலசண்முகநாதனின் நிதி ஒதுக்கீட்டில், வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தியடைந்த மாணவனுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கி கௌரவிக்கப்பட்டது. (ய-159)



கிளிநொச்சி பூநகரி மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் தரம் ஒன்று மாணவர்களுக்கு, பூமணி அம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான செயலாளர் என்.விந்தன் கனகரட்ணம் மற்றும் நிர்வாகியால் புத்தகப் பைகளும் கற்றல் உபகரணங்களும் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (ய-20)

## விற்பனைக்கு

T.V.S Wego மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
075 623 7906 (யாழ்ப்பாணம்)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வசாவிளானில் ஒட்டகப்புலத்தில் 39 பரப்புக் காணி 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.**
❖அச்சுவேலி தெல்லிப்பழை பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி
❖பிரதான வீதியில் இருந்து 50 M தூரத்தில்
❖ஒட்டகப்புலம் றோ.க.த.க. பாடசாலைக்கு அருகாமையில் 14 அடி பாதையுடன்.
❖அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 02 KM தூரத்தில்
❖பரப்பின் விலை 6 1/2 லட்சம்
(CS 19549A)
தொடர்பு: **077 9116 983**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வயாவிளானில் 42 பரப்புக் காணி 2 பரப்பாகவும் 2 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு.**
❖வயாவிளான் மகா வித்தியாலயத்தில் இருந்து (பலாலி வீதி) 1km தூரம்.
❖வயாவிளான் தபால் கந்தோர் அருகாமை (300m தூரம்)
❖14 அடி பாதையுடன்
❖1 பரப்பின் விலை நான்கு இலட்சம்
❖அச்சுவேலி-தெல்லிப்பளை பிரதான வீதியில் இருந்து 800m தூரம்
(CS 19549A) (1.6)
**074 043 6599, 074 043 6375**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு புதிய செம்மணி வீதி, ஆனந்தபுரம் பகுதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
14 அடி பாதையுடன்
நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
கல்வியங்காட்டு சந்தியில் இருந்து **2 KM** தூரம்
**பார்வையிடும் நேரம் :**
**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை**
**1 பரப்பின் விலை 750,000/=**
தரகர் தேவையில்லை
**ஜெயம்**
**077 8147 389**
**077 2417 589**
(CS 19538)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



கடந்த 10.05.2021 திங்கட்கிழமை அன்றுசிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

### அமரர் பாலசுப்பிரமணியம் சிவனேஸ்வரி

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (29.04.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## அப்புத்துரை செல்வநாயகி



தோற்றம் 17.07.1940
மறைவு 28.04.2022

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை செல்வநாயகி நேற்று (28.04.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - செல்வக்கண்டு தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பத்தினி தம்பதியரின் அன்பு மருமகளும், அப்புத்துரையின் அன்பு மனைவியும், ஸ்ரீநாதன் (நெதர்லாந்து), காலஞ்சென்ற ஸ்ரீறஞ்சினி மற்றும் ஸ்ரீறஞ்சினிதேவி, ஸ்ரீசங்கர், சிவசக்தி, சிவனடிபாதம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், றொசித்தா (நெதர்லாந்து), முருகதாஸ், அஜிதா, ரஜீவன், ஜசித்தா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், றோசினி (நெதர்லாந்து), சங்கீதன், சுமன், தருணிகா, லனுஷியா, லக்ஷிகா, பங்கயா, கோவர்த்தனன், ரிஷிவர்னன், நத்திலா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நரியிட்டான்,**
**மல்லாகம்.**

**தகவல்:**
**கணவர் அப்புத்துரை**
**(மல்லாகம் பெரியதம்பிரான் ஆலய பூசகர்)**
(cs 19536) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.